# மாணவர் விடியல்


மலர் : 26 புரட்டாதி - ஐப்பசி : 2007

இயேசு சபை அகதிப்பணி, 31, கிளிபர்ட் பிளேஸ், கொழும்பு – 04. தொலைபேசி : 2504384

## ARRUPE CENTENARY YEAR
1907 - 2007

JRS

என் கனவு



ஸ்தாபகர் பேதுரு அருப்பே

## அன்பும் நீதியும் உண்மையும் நிறைந்த சமதர்ம சமாதான சமுதாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமும் கைப்பழக்கம்




ம. யாழினி
அச்சுவேலி




அன்ரனிகுயின்ரன்
ஓலைத்தொடுவாய்




L. சம்சுபானு




ச. தாரகா
அச்சுவேலி



செ. சௌமியா



V. துஸ்யந்தினி



க. கில்பாகரன்
பூம்புகார்



சீ. கண்ணன்
மடுக்கரை




கி. அன்ரனிற்றா
அச்சுவேலி



N. F. நஸீரா



M. அஜித்
செட்டிகுளம்




செ. ரேவதி
தரணிக்குளம்



மை. மரியகமலினி
பெரியகுஞ்சுக்குளம்



சி. நிர்மல்குமார்
செட்டிகுளம்



ம. மரியஜிலானி
அச்சுவேலி



மு. மயூறன்
கொக்குப்படையான்



ரா. ராஜவதனி
சமயபுரம்



தெ. போல்தாசன்
செட்டிகுளம்




ம. தமிழினி
அச்சுவேலி




இ. மாலதி
அச்சுவேலி




யே. றொக்சி
மண்டைதீவு



L. அகமட்அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அன்புள்ள தம்பி, தங்கைகளே!***

***இயேசு சபை அகதிப் பணியினரின் அன்பும் இறை ஆசியும்!***

கடந்த 12 ஆண்டுகளாக நான் கண்ட ஒரே கனவு இலங்கையில் சமாதானம் மலர வேண்டும் என்பதே. ஆனால் அந்தக் கனவு இன்று வரை நனவாகாமல் இருப்பது மனதிற்கு மிகப் பெரிய வேதனை அளிக்கின்றது.

நான் கனவு கண்ட சமாதானம், முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளியல்ல. மாறாக நீதியும் அன்பும் நிறைந்த சமதர்ம சமுதாயம். ஏற்றத் தாழ்வுகளற்ற ஏற்றமான உலகம். அன்பும் பண்பும் நிறைந்த பாசமான உலகம். தியாகம், உண்மை உள்ள உயர்ந்த சமுதாயம். மன்னிப்பும் ஒப்புரவுமான புனிதமான சமுதாயம்.

ஆனால் இன்று வரை இவை யாவும் எட்டாக் கனியாகவும், கானல் நீராகவும் மாறிக் கொண்டிருப்பது மனதிற்கு விரக்தியும் உடலுக்குச் சோர்வுமளித்து, வாழ்க்கையையே கேள்விக் குறியாக மாற்றியுள்ளது.

கடந்த சில மாதங்களாக இதையே ஆழமாக சிந்தித்த போது என் கனவுக்கு ஓர் தெளிவு ஏற் பட்டது. இன்று மனிதனைப் பார்க்கும் போது அவன் ஒட்டுமொத்த முரண்பாடுகளின் உருவமாகவே தோற்ற மளிக்கின்றான். மனிதனுடைய அடிப்படைப் பண்பு களுக்கும், மதிப்பீடுகளுக்கும் எதிராகவே செயல்படுகின்ற சூழ்நிலை காணப்படுவதனால் முரண்பாடுகளை அவனால் தவிர்த்துக் கொள்ள இயலாமல் போய் விடுகின்றது. போர், வன்முறை கலாசாரம், ஜாதி, இன, மதப் பிளவுகள், சுயநலம், பொய், களவு, ஏமாற்றுதல் போன்ற முரண்பாடுகளுக்குள் அவன் உழன்று தவிக்கின்றான். இதனால் உடலிலும், உள்ளத்திலும் அமைதியை இழந்து மனிதம் சிதைந்த நிலையில் மகிழ்ச்சியற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

தனக்குள் உள்ள இந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு காணாமல் நாட்டிலே சமாதானம் மலர அவன் எடுக்கின்ற முடிவுகள் அனைத்துமே தோல்வியை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கின்றன.

பேச்சுவார்த்தைகளும், அரசியல் தீர்வுகளும், இராணுவ முடிவுகளும் நாட்டில் சமர்தானத்தைக் கொண்டுவந்தாலும் மனித மனங்களிலுள்ள முரண்பாடுகள் தீராத வரைக்கும் நிரந்தர சமாதானம் நாட்டில் நிலைக்கப் போவதில்லை.

அன்பு, சமாதானம், நீதி நிறைந்த சமுதாயத்திற்கு ஆசைப்படும் நான் முதலில் இந்த பண்புகள் என்னிடத்தில் இருக்கின்றதா? என்ற ஆய்வை மேற் கொள்ளத் தவறிவிடுகின்றேன். இந்தப் பண்புகள் நம் ஒவ்வொருவர் மனதிலும் செழித்து வளரும் போது சமாதானத்தைத் தேடிப் போராட வேண்டியிருக்காது. மாறாக சமாதானம் நம்மைத் தேடி வரும்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் போதனைகளையும், அவரது வாழ்க்கை முறையையும், புனித இஞ்சாசி யாரின் ஆன்மீக பயிற்சியும் தனி மனித மன மாற்றத்தின் மூலமே சமுதாய மாற்றத்திற்கு வித்திடுவதாக உள்ளது.

இந்தத் தேடுதலின் வழியாக ஒன்று என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. "If you want peace work for justice"“ உனக்கு சமாதானம் வேண்டுமென்றால் நீதிக்காக பணி செய்”

நாம் ஒவ்வொருவரும் இந்தப் பண்புகளை நம் உள்ளத்தில் வளர்த்துக் கொண்டு அதை சமுதாயத்தில் உருவாக்க உழைப்போம் என்றால் நாம் கண்ட கனவு நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இருக்க முடியாது. இதைத் தொட்டு சுவைத்து அந்த மகிழ்ச்சியில் நிலைக்க நாம் அனைவரும் இணைந்து பாடுபடுவோம்.

இக்கருத்தை மாணவர் மன்ற கூட்டத்தில் வாசித்துக் கலந்துரையாடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மாணவர் விடியலுக்கான 26வது தலைப்பு **‘பிரிவு’** இது குறித்த உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். உங்களுடைய ஆக்கங்கள் ஐப்பசி 5ந் திகதிக்கு முன்னதாக அனுப்பி வையுங்கள்.

உங்கள் உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கு விடை காண விரும்பின் கடந்த காலங்களில் வினாக்கள் அனுப்பியது போல வினாக்களையும் எழுதி அனுப்புங்கள்.

அன்புடன்,

**Fr. வின்னி ஜோசப்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கனவு

சாதிக் கொடுமைகள் தீர்ந்து வையகத்தில்
ஒற்றுமையாக மக்கள் வாழ வேண்டும்!
அழிவினைக் காட்டும் இவ்வாண்டில்
சாந்தியும் சமாதானமும் மலர வேண்டும்!

செவ்வாயில் குடியேறிக் கும்மாளம் போட
நினைக்கின்றது அறிவுலகம் – ஆனால்
பூமியில் வளமிருந்தும் நிம்மதியின்றித்
தவிக்கின்றது மனித இனம்!

குண்டுகள் சுமந்து பறந்திட்ட போர்
விமானங்கள் இனி மலர்ச்
செண்டுகள் சுமந்து வந்து
ஈழமதில் மலர் தூவ வேண்டும்!

போர்க்களத்தில் காயப்பட்டுக் குற்றுயிராகக்
கிடக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம்,
புதிதாக உயிர்பெற்று, மீண்டும் மிடுக்குடன்
நிரந்தரத் தீர்வைத் தர வேண்டும்!



இனமத பேதங்களை வேரோடு பிடுங்கி
உயர்ந்த உன்னத மனித நேயத்தை
நாம் பூசிக்க வழி செய்திட வேண்டும்!
சௌபாக்கியம் நிறைந்த அமைதி
நாடாக – எம் நாடு திகழ வேண்டும்!

**ச. யூடிற்றொஜாந்தன்,** குமானயாங்குளம்.

✤—✤—✤

## தந்தையின் கனவு

மகனே! மகளே!
உன் உயர்வுக்காய்
நான் சுமப்பது மண்
கூடையை மட்டுமல்ல,
மன உறுதியையும் தான்.
உன் கனவுகளுக்காய் – நான்
உடைப்பது கற்களை மட்டுமல்ல,
வியர்வைத் துளிகளையும் தான்.
உன் இலட்சியத்துக்காக
நான் தூக்குவது
செங்கற்களல்ல, – உன்
வெற்றிக்கான அத்திவாரக் கற்கள்.
சித்தாளாய் சீமெந்து கலக்கையிலும்,
சிந்தனையோ உன் கல்வியிலே – இந்த
ஏழைத் தந்தையின் இமைகளிலும்,
இலட்சியக் கனவொன்று உண்டு.
போரினால் இடம் பெயர்ந்து,
அகதிகளாய் நாம்,
சேர்க்க எதுவும் இல்லை,
சேமிப்பது கல்வி ஒன்றே.
கல்வி என்பது கரை காண முடியாதது.
கல்லாதவன் கண்ணிருந்தும்
குருடன் ஆவான்.
உனது வாழ்வில்...
எந்நிலை வந்திடினும்
கல்வியால் உயர்வதே
நாளைய ஈழ நாயகன் நீ தேடும்
ஈடு இணையற்ற செல்வம்.



அருள் மலர்.

# உன் கனவும் அரங்கேறும்



ஈர இரவினில் நூறு கனவுகள்
என் இதய அறையினுள் விழித்துக்
கொண்டிருக்கும் என் நினைவுகளே!

அரை வயதில் இழந்திட்ட தந்தையின்
அரவணைப்பினை அறிய முடியவில்லை
என்னுள்ளே! - ஆசையாய் என்
அன்னை அரவணைத்திட்ட காலங்களும்,
அனாதையாக என்னுள்ளம்
புண்பட்ட நாட்களும் ஏராளம்

சிந்தனையில் எண்ணங்கள் சிதறிய
போதுதான் உணர்ந்திட்டேன் காலமதைத்
தேடி கிடைக்காத வாழ்க்கை இதுவென.
நிலையில்லாத நீர்க்குமிழி - ஆனதுவும்
கானல் நீர் போல காணும் வாழ்க்கை
மண்ணாகிக் காய்ந்து சருகாகிப் போவதும்
மானிடர் உயிர் வாழும் வரையிலே!

தந்தையை இழந்த உள்ளம்
தரணியில் உழல்கின்றதே
தனிமையிலும் தவிக்கின்றதே!
ஆசைகள் நிராசைகளாகிடவே
கனவுகள் கானலாக, உடலை உருக்கி
உடலைப் பிழிந்து, இன்பங்கள் இருளாகி
நாம் கிட்ட நெருங்கும் போது எட்டிப்
போகும் உள்ளமும் - ஈரமற்ற
பார்வையும் தொலைந்து போன
உறக்கமும், வீசிய வார்த்தைகளால்
சுடர்விட்டெரியும் உள்ளமும்,
துன்பக் கதறல், துயரக்
கண்ணீர், ஓயாத புலம்பல்
உணராத சண்டை!

காரணமின்றிக் கிடைத்த புண்கள்,
அதனை எண்ணிக் கலங்கி
சிவந்திருக்கும் கண்கள்!
மங்கையின் உள்ளம் கங்கையாவதுவும்,
நிலையில்லாப் பணமும், விலையில்லா
அழகும்! தண்ணீரில் நெருப்பைக் கண்டு
தாளாத சோகமும், பாசங்களும்,
வெளி வேசங்களும் - சிற்றின்பச்
சிறைக்காக சீரழியும் சமூகமும்
எம் கண்முன்னே கண்டுணர்ந்தோம்!

தன்னலம் துறந்து பிறர் நலமாக
வாழ அர்ப்பணிப்பும் - சரளமான
சமூகத் தொண்டுகளுமே என் கனவு!
வாழத் தெரிந்தவனுக்கே வாழ்க்கை!
கனவுகளின்றி வாழும் வாழ்க்கை
திசையில்லாத ஓடம் போன்றதே!
கண்ணைப் போல கனவினையும்
நேசி, நிச்சயம் உன் கனவும்
ஒரு நாள் அரங்கேறும்!

**யுவான் நிரஞ்சலா,** இருதயபுரம்

**உண்மையான அறிவியல் வளர்ச்சி நாட்டின் பாதுகாப்புக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பயன்பட வேண்டும்.**



**மிருகங்களில் மிக உயரமானது – ஒட்டகச்சிவிங்கி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JRS வாழ்த்துப் பாடல்



வாழ்க வாழ்க பல்லாண்டு
வளர்க யேசு சபை அகதிப்பணி!

தோழமை சேவை நீதிக்காக
உலகினில் பலதிசை குரல்கொடுத்து
இறை அன்பு, விசுவாசம் என்பன கொண்டு
உளமதில் ஆவல் கொண்ட சபை!

மனித நேயம் வாழ்ந்திடவே
மண்ணில் மலர்ந்தது யேசு சபை!
உலகினில் சமத்துவம் சிறந்திடவே
பாரினில் நறுமணம் பரப்பிடுதே!

அகதி நிலைமினை மாற்றிடுவோம்,
அர்ப்பணிப்போடு செயற்படுவோம்!
தாழ்ச்சியோடும், பகிர்வோடும் உறவாடி
உள்ளத்தில் உவகை பெற்றிடுவோம்!

ஊனமுற்றோர் மடங்கள், அனாதை
மடங்கள் அமைத்துமே,
மாலைக் கல்வி, முன்பள்ளி மாணவர்கள்
உலகினில் உயர்ந்திட வழிவகுத்த சபை!

தையல் பயிற்சி வாழ்வியல்
என்றும் சிறந்திடவே – கடலினில்
கடற்றொழில் செய்திடவே
உதவி செய்த அகதிப் பணி
என்றென்றும் வாழ்க!




## மகிழ்ச்சி எப்போது?

நானோ பெண்மை என்ற சோகக்
கண்ணாடிக் கிண்ணம்,
யாருடைய சாப எண்ணமோ
என் வாழ்க்கை வண்ணம்,
கவலை என்னும் கண்ணீர்
தூறல்களால் நாளும் நனைகிறதே
என் கன்னம் - நான் துன்ப கங்கையிலே
நீந்தும் ஓர் அப்பாவி அன்னம்!
அற்ப காலம் அன்னை தந்த பாசமன்றோ
என் வாழ்வின் நினைவுச் சின்னம்!
வாழ்வின் துயரங்களை நினைத்து
கவி வடிப்பதன்றோ இவளின்
அயராத எண்ணம்!

**ந. யசோதரன்**, பூந்தோட்டம்.

## தயக்கம் ஏன்?

ஏக்கத்தின் தாக்கத்திலிருந்து விடுபட
ஊக்கத்தோடு ஆக்கத்தினை
மேற்கொள்ள அடிமைத்துவ
மனச் சிறையை உடைத்தெறிய
இன்னும் தயக்கம் ஏன்?
உன்னால் இயலாதது என்பது
வெறும் மயக்கம் தானே!
வெள்ளிவிழாவிற்கு என் வாழ்த்துக்கள்.



**பு. கஜனி**, அச்சுவேலி.

*ஆண்டவரின் ஆவி உயிருள்ளது.*
*ஆற்றல் வாய்ந்தது.*
*இரு பக்கமும் வெட்டக் கூடிய வாளிலும் கூர்மையானது.*

**ஞா. தர்ஷா**, அச்சுவேலி.

## என் கனவு



எண்ணப்பட்டுவிட்டன என் வாழ் நாட்கள்
எத்தனையோ கனவுகள் எனக்கு!
எப்படி நனவாக்கப் போகின்றேன்?
ஏழைகளோடு பிரியாத
தோழமைகொள்ள வேண்டும்!
துன்பப்படுவோரின் துணைவியாக
கண்ணீர் துடைக்க வேண்டும்!
எரிந்திடும் பசித் தீ அணைந்து
சிரித்திடும் முகம் காண வேண்டும்!
இன்னும் கொஞ்ச வாழ்நாட்கள்
அன்புடன் அருள்வானா ஆண்டவன்?
என் கனவையெட்டும் வரை பறிக்கப்படாமல்
இருக்குமா வாழ்வு? - எண்ணப்பட்டுவிட்டன
என் வாழ்நாட்கள் உண்மைதானா?
இருக்கின்ற நாள் வரைக்கும்
வருகின்ற கண்ணீர் இன்றி
சிரிக்கின்ற ஒரு வரம் வேண்டும்!
இனிக்கின்ற கரும்பாக வாழ்வைச்
சுவைக்கின்ற பெருவரத்தை
எட்டுவதே என் கனவு!
என் கனவுகள் பலகோடி – சில
கனவுகள் இவையாவது நிறைவேறட்டும்!

**சா. சஜேந்தினி**, வவுனியா.

## ஆசைச் சொப்பனம்



வறுமைகள் ஒழிய வேண்டும்
அகதி என்ற அவதி நிலை மறைய
வேண்டும் ~ நாட்டில் சுதந்திரம் மலரணும்
அராஜகம் அழிய வேண்டும்!

பஞ்சம் பறக்க வேண்டும்,
பாராபட்சம் மறைய வேண்டும்,
குடிசைகள் மாடிகளாகி,
குன்றுகள் மலைகளாக மாற
சொப்பனம் காண வேண்டும்!

பாமரர் என்ற நிலை நீங்கி,
பார் போற்ற அனைவரும்
முத்தான கல்வியினை
வித்தாக சிரந்தாழ்த்தி
சீர் பெறவே கற்றிடணும்!

துப்பாக்கி முனை ஓய்ந்து
பேனாமுனை தீட்டப்பட்டு
அல்லலுறும் நம் நாட்டை
சகோதரத்துவமுடன் அனைவரும்
ஒன்றிணைந்து காத்திடணும்!

வீசும் தென்றலும் மலர்கின்ற
பூக்களும் சுதந்திர மணம் பரப்பி
நான் என்ற நிலை நீங்கி
எம் நாடு, நாங்கள் என்ற உணர்வுடன்
மனித நேயமுள்ள மனிதர்களாக
சுதந்திரக் கொடி ஏற்ற வேண்டும்!

**மு. அகிலா**, கதிரவெளி.

*நாணயத்தை இழந்தவன்,*
*இழப்பதற்கு வேறொன்றும் இல்லாதவன்.*



*PC என்பதன் பொருள்* – **Personal Computer**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இலட்சியக் கனவு

கண்கள் மூடி என் இதயம் ஏந்திய
இனிய கனவுகள் ஏராளம்
அவை கொண்டாட்டமும்
மகிழ்ச்சியும் தருபவை!
இவை தவிர என்னால் வர்ணம் பூசப்பட்டு
வரும் என் இலட்சியக் கனவுக்காக கண்
விழித்திருந்து நனவாக்கப் பார்க்கின்றேன்!

அக் கனவு நனவாகப் போகும்
முதற்படியில் தோல்வி கண்டேன்
இன்னல் இன்றேல் வாழ்வின்
இலக்குத் தெரிவதில்லை!
ஆனால் முயற்சியை தொடர்கிறேன்.
எவ்வாறாயினும் சின்னச் சின்ன
தோல்விகள் என்னை ஆட்கொள்கின்றன!



நம்பிக்கையின் நாற்றுக்கள் ஆயிரம்,
தோல்வியிலும் அனுபவப் பாடம்
ஆயிரம் தளராதே மனமே,
தோல்வி என்பது இல்லை
என்கின்றது என் ஆழ்மனம்!

வாழ்க்கை ஒரு தடைக்களப்
போட்டி என்பதை உணர்ந்தவராய்
எடை போட்டுப் பார்க்கின்றன்
இறந்த காலத்தையும்
இந்த நேரத்தையும் நேசிப்பவன்!

அனுபவப் பாடங்களில்
வெற்றிகொள்ளப் போகும்
துணிந்த மங்கை நான் என்ற
நம்பிக்கையில் என் இலக்கு
நோக்கித் தொடர்கின்றேன் தெளிவான
என் இலட்சியக் கனவோடு!

**M. ஜெனி,** வவுனியா.

❊❊❊

## சமாதானம்

குயில்கள் கீதம் பாடுதே
தென்றல் மெல்ல அடிக்குதே
பாரில் நாங்கள் மகிழவே
குண்டுச் சத்தம் மறையவே
சமாதானம் வேண்டுமே!
மரங்கள் பூத்துக் குலுங்குதே,
கனிகள் காய்த்து விழுகுதே,
பறவையினம் உண்டு மகிழுதே,
கீதம் பாடிப் பறக்குதே,
தமிழர் நாங்கள் சந்தோஷமாக
வாழவே இறைவா நீயும்
சமாதானம் தந்திடு!



❊❊❊

**பல்வேறு வகையான பிரச்சனைகளின் தொகுப்புத்தான் வாழ்க்கை. அதனால் வாழ்வில் பிரச்சினைகள் தோன்றும்போது அவற்றை வாழ்க்கையின் அம்சங்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர பிரச்சனைகளைக் கண்டு மிரளக் கூடாது. பல்வேறு பிரச்சனைகள் இருந்தால் தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்.**

**கு. அலெக்ஷன்,** கோப்பாய்.

## என் கனவு பலிக்கும்

கனவுகள் கருகி கல்லறையில் வாழ்வை
முடித்துக்கொள்ளாதே மனிதா!
கனவுகள் கருக்கொண்டு உருக்
கொள்ள வழி செய் மனிதா!
கனவுகள் நனவாகி நல்வாழ்வு
வளம்பெற வழிசெய் மனிதா!
கனவுகளைக் கரைத்து காற்றில்
பறக்க வையாதே மனிதா!

நல்லவைகளை நட்புடன் எண்ணு மனிதா!
நல்லறம் போற்றும் நாயகனாக.
நாற்றிசையும் சிறப்பாக நற்சொல்லறம்
காத்து - சோர்விழாது நின்றால்
நற்செங்கோன்மை பொருந்திய
சிறப்படைவாய் மனிதா!



இல்லறம் காத்து இனிய தர்மம் செய்தால்
இறவாத இறைமையுடன் இரண்டறக் கலப்பாய்!
துறவறம் என்னும் தூய பணி
செய்தால் துன்ப துயர்துடைத்து
தூயவனின் பாதம் அடைவாய்!

**இ. பாமினி,** மறவன்குளம்.

❊❊❊

## என் கனவு

பட்டுப் பூச்சிகளாய் சிறகடித்து
பாரினில் சின்னப் பறவையாகப் பறக்க
வேண்டிய என்னை சுட்டுப் பொசுக்கி விட்டதே
இந்தப் பாழாப்போன யுத்தம்
கலைகள் பல கற்று உலகைக் கலக்க
வேண்டிய என்னையும், என்
கனவுகளையும் அழித்துவிட்டாயே!
ஏன் என்னை ஊனமாக்கிவிட்டாய்?
என்னுடன் உனக்கென்ன கோபம்?
யுத்தம் வேண்டாம் பலரது
இலட்சிக் கனவுகளைச் சீரழிக்கும்
யுத்தம் இனியும் வேண்டாம்.



**சு. சுமந்தினி,** பால்சேனை.

❊❊❊

## என்றும் ஒளி வீசும் விடியல்!

மலருக்குள் மலராகி மானிடர்
இதயத்தில் இடம் பிடித்து
அணையாமல் ஒளி வீசும் விடியல் நீ!

கலியுக காலத்தில் புதுயுகம்
படைத்து வருகின்றாய் விடியலே!
தோல்வி வெற்றியின் அத்திவாரம்
நமக்கு உன் வருகையின்
வெற்றியே அத்திவாரம்!



அன்னையின் மடியில் தவழும்
சேயைப் போல மானிடர்
மடியில் தவழ்கின்றாய்!
அனைவரின் பாராட்டும் வாழ்த்தும்
உன்னை சேரும் போது
உனக்கேது தாழ்வு!
என்றும் ஒளி வீசும் விடியல் நீ!

**இ. சுகிர்தா,** சிவன்தீவு.



பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் – **238,860 மைல்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேறுமா என் கனவு

இயற்கை அன்னையின் கனவு
அழியாத உலகம்!
சொந்தங்களின் கனவு
அழிந்து செல்லாத உறவு!
ஏழைகளின் கனவு
அழிந்து போகாத அமைதி!
இயேசு சபை அகதிப் பணியின் கனவு
அகதி இல்லா உலகம்!
மழலைகளின் கனவு
சத்தம் இல்லாத பூமி!
சின்னஞ் சிறார்களின் கனவு
நிலையான கல்வி!
நிறைவேறுமா..... என் கனவு???

**S. சிவரூபனா,** கந்தளாய்.

## கலைந்த கனவு



இரவின் மடியில் நித்திரையின் பிடியில்
சங்கமித்த பொழுதில்
சந்தித்தேன் கனவில்
சண்டையில்லா உலகு!
சந்தோசமான பொழுது
சமாதானம் கொண்ட
சங்கடமில்லா வாழ்வு!
அகதிகளும் இல்லை,
அவதிகளும் இல்லை,
அன்னியர்களும் இல்லை,
அனியாயக்காரர்களுமில்லை!
நீண்டிருந்த கனவில்
நிலைத்திருந்த பொழுது
நிம்மதியில் நானும்
நின்றுகொண்டிருந்தேன் கனவில்,
விடிந்தது பொழுது
கலைந்தது கனவு
எழுந்தேன் நனவில்
ஏக்கம் நிறைந்த உள்ளத்தோடு

**க. குமுதா,** சிவன்தீவு.

## படித்துச் சுவைத்தது

இடர்வரும் போதும் – உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல – மாந்தர்
உறவு கொள்வார் அப்பா!

ஓடும் உதிரத்தில் வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் சாதி
தெரிவதுண்டோ அப்பா!

நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தீமை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

**சி. பிரசாந்தினி,** தேவர்குளம்.

★ வெற்றி கற்றுக் தருவதை விட தோல்வி மிகுதியாகக் கற்றுக் தருகின்றது.

★ பெற்ற அன்னையை ஒருபோதும் மறவாதே.

**ச. அன்ரனி ஜெயராஜ்,** பெரியகுஞ்சுக்குளம்.

காலங்கள் பதினாறு ஆகிவிட்டன
கண்ட கனவுகளில் இதுவும் ஓர் கனவாயிற்று
இதுவே என் இலட்சிக் கனவாயிற்று!
படித்துப் பல்கலைக்கழகம் சென்று
படிப்பில் பட்டதாரியாகி வீட்டிற்கும் நாட்டிற்கும்
பயன்தரக் கூடிய ஓர் இலட்சியவாதியாகிய நான்
டாக்டர் எனும் பட்டம் பெற்றிடுவேன்
எனும் என் இலட்சியக் கனவினில்
நீருடன் அலை போன்று மிக
ஆழமாக மூழ்கியுள்ளேன்.

**K. மோகனரூபன்,** பூந்தோட்டம்.


*கண்ணீர் கதை எழுதவோ*
*காகிதங்கள் போதாது,*
*இந்த யுத்த பூமியிலே*
*எவர் நெஞ்சிலும் ஈரமில்லை.*
*நெருப்பாகியது சுவாசக் காற்று*
*விடியலை நோக்கிக் கிழக்கே*
*பயணித்தும் - முடிந்து போனது*
*நாட்களே யுத்தமில்லை!*



**ந. டிலக்சனா,** மறவன்குளம்.

## நிம்மதிக் கனவு

பேரினவாதத்தாலும் போரின்
கொடுமையாலும் பொலிவிழந்து
கிடக்கின்றது நம் தேசம்.
நலிவுற்று நாமெல்லாம்
நசுக்கப்பட்டு தினம் நடை
பிணமானதெல்லாம் எதனால்?
நல்லவர்களும் வாழும் இவ்வுலகில்,
பொல்லாதவர்கள்தான் போருக்கு
உரமிடுகின்றார்கள்! கசடறக் கற்றுப் பாரினில்
பட்டங்கள் பெற வேண்டும் என்ற
இலட்சியக் கனவை விடவும் – யுத்தங்கள்
ஓய்ந்து மக்கள் நித்தமும்
நிம்மதியாக வாழ்வாங்கு வாழ வேண்டும்
என்பதே இப்போதுள்ள என் கனவு



**செ. சற்குணலிங்கம்,** கதிரவெளி.

## நிறைவேறாத கனவு

நீ துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில்
மண்ணினுள் நுழைந்துவிட்டாய்!
அறிவைப் பெறும் வயதில்
அனைவரையும் தவிக்கவிட்டுவிட்டாய்!
நான்கு அண்ணன்மார்க்கு ஓர் தங்கையான
நீ எம்மைத் தனிமையில் தவிக்கவிட்டுவிட்டாய்!
தாய், தந்தைக்கோர் ஆசை மகளாக
அன்புடன் வளர்ந்தவள் நீ!
சதியவன் செய்த விளையாட்டினால்
நீ விரைந்து போய்விட்டாய்!
என் தங்கையாக மீண்டும் நீ பிறக்க
ஏக்கத்துடன் கனவு காண்கின்றேன்.

**ந. வர்ணசாந்,** கதிரவெளி.



சூரியக் கதிரிலிருந்து கிடைக்கும் விட்டமின் – **விட்டமின் D**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதினக் கனவு

வெள்ளி மீன்கள் துள்ளி விளையாடும் நீலக்கடலே!
உன் மீது மனித உயிரைக் காவுகொள்ளும்
காவிகள் பயணம் செய்யாத காலம் வர வேண்டும்.
கடல் மீன்களெல்லாம் கலக்கமின்றி கானம் படிக்க!

தங்கத்தின் நிறமெடுக்கும் கதிருக்கெல்லாம்
உயிர்கொடுத்து தரணியை வாழ வைக்கும் களனியே!
உன் மீது குண்டு மழை பொழியாத
காலம் வரணும் தங்கக் கதிர்களெல்லாம் காற்றிலே
ஆட்டம் போட்டுக் கோட்டமடிக்க!

சொந்தங்களைப் பார்ப்பதற்கும். சோலிகளை
முடிப்பதற்கும் பயணம் செய்யும் பாதையே!
உன் மீது சோதனைச் சாவடிகள்
இல்லாத காலம் வர வேண்டும்.
மனிதரெல்லாம் மனிதராகப் பயணம் செய்ய!



நல்ல பத்தர்களையும் கவிப் பித்தர்களையும்
பெரும் ஞானிகளையும் உருவாக்கும் கல்விச் சாலையே!
உன் மீது செல் வீச்சும். குண்டு பீசும்
கிழிக்காத காலம் வர வேண்டும்.
மாணவரெல்லாம் நிம்மதியாகப் பாடம் படிக்க!

**S. டில்லி ராணி,** கதிரவெளி.

✤✤✤

## கனவை நனவாக்கு



மானிடனே கனவு சுகம் தரும்,
நிஜமான வாழ்க்கையைத் தராது.
உறுதியோடும் மன வலிமையோடும்
போராடு எனக்கு வெற்றி நிச்சயம்!
கடலில் மிதக்கும் கப்பல் போல நீ
உன் கனவில் மிதக்கின்றாய்!
கனவு என்னும் கப்பலை கரையோரத்தில்
நிறுத்திவிட்டு எழுந்து வா!
மானிடனே உன் வெற்றிக்காக!

பாரத தேசத்தை அன்னியர்களிடமிருந்து
மீட்டெடுக்க காந்தி தன் உயிரைத்
துச்சமென மதித்துப் போராடினார்
உன் கனவை நிஜமாக்க போராடு,
நிச்சயம் வெற்றி உன்னைத் தேடி வரும்!



**ந. ராகினி,** சிவசக்திபுரம்.

✤✤✤

## என் கனவு

தத்தித்தாவி விளையாடி
தரணியில் உலாவர வேண்டும்!
தெள்ளு தமிழ் நான் கற்று,
தேசமெங்கும் வலம் வர வேண்டும்!
பெற்றோர் புகழும் வண்ணம்
பெருமை பெற உழைக்க வேண்டும்!
என் எண்ணம் எல்லாம் செயல் பெற,
அனைவரும் ஒன்றுபட்ட தாகம்
தீரும் சமாதானம் வேண்டும்!

**யோ. சுஜித்திரா,** வாகரை.

## கட்டாய ஓசைகள்

வெடியோசை கேட்பதற்குப் பதிலாக,
பட்டாசு ஓசை கேட்க வேண்டும்!
மனித அழுகுரல் கேட்பதற்கு பதிலாக,
தாயின் சிரிப்போசை கேட்க வேண்டும்!
அகதி என்ற ஓசைக்குப் பதிலாக,
நிரந்தர இருப்பிடம் என்ற
ஓசை கேட்க வேண்டும்!
வேலை இல்லை என்பதற்குப் பதிலாக,
வேலைகள் பலவுண்டு எனும்
ஓசை கேட்க வேண்டும்!
பசி என்னும் ஓசை நீங்கிப்
பசியின்மை எனும் ஓசை கேட்க வேண்டும்!
நாட்டில் யுத்த ஓசை நீங்கி,
நிரந்தர சமாதானம் என்னும்
ஓசை கேட்க வேண்டும்!



**வ. சதீஸ்குமாரி,** மயிலங்கரச்சை.

✤✤✤

## மாணவர்களே கேளுங்கள்!

பள்ளி செல்லும் சிறுவர்களே
பாதை ஒழுங்கைக் கற்றிடுவீர்!
பாதையின் குறுக்கே ஓடாதீர்,
பார்த்து ஓரமாகச் சென்றிடுவீர்!
விரைந்து செல்லும் வண்டி பல,
வீதியில் சென்றிடும் பார்த்திடுவீர்!
வீதியைக் கடக்க வேண்டுமெனில்
வீதி ஒழுங்கைக் கடைப்பிடிப்பீர்!



பாதசாரி கடவைதனை
பார்த்து - நீங்கள் கடந்திடலாம்!
மஞ்சட் கோட்டுக் கடவைதனை
மனதிற் கொண்டு கடந்திடுவீர்!
ஆறு, குளங்களில் இறங்காதீர்
ஆபத்துக்களில் சிக்காதீர்!
பாதுகாப்பைப் பேணிடுவீர்,
பண்பாக வாழப் பழகிடுவீர்!

**மோகன்சரன்சா,** சுந்தரபுரம்.


✤✤✤

மாணவ விடியலின் தாலாட்டில்
மாணவ மலர்கள் மகிழ்கின்றன!
மாணவ விடியலைச் சுவாசித்தவர்கள்
கல்வியில் செழித்து வளர்கின்றார்கள்!
மாணவ விடியலைப் பார்க்கின்ற உலகம்
கண்விழித்துக் கொள்கின்றது!
உனக்கு என் வாழ்த்துக்கள்

**சி. யஸ்ரினா,** ஆனைக்கோட்டை.

✤✤✤

## சிறந்த ஆசிரியரின் பண்புகள்



| | |
|---|---|
| அன்பு | பொறுமை |
| நல்லொழுக்கம் | இரக்கம் |
| திறமை | உச்சரிப்புத் திறன் |
| அறிவு | குரல்வளம் |
| நேர்மை | நீதி |
| முன்மாதிரிகை | நேரக்கட்டுப்பாடு |
| பாரபட்சமின்மை | |

திறமையான மாணவர்களை உருவாக்கல்



மூளைக்குச் செல்லும் இரத்தம் நிறுத்தப்பட்டால் ஏற்படுவது - **ரத்த அடைப்பு (கோமா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

- வாழ்க்கை ஒரு **சந்தர்ப்பம்** - அதை நழுவ விடாதீர்கள்.
- வாழ்க்கை ஒரு **பயணம்** - அதைச் சென்று முடியுங்கள்.
- வாழ்க்கை ஒரு **விடுகதை** - அதை விடுவியுங்கள்.
- வாழ்க்கை ஒரு **விளையாட்டு** - அதில் ஈடுபடுங்கள்.
- வாழ்க்கை ஒரு **போராட்டம்** - அதை வென்று காட்டுங்கள்.
- வாழ்க்கை ஒரு **வெகுமதி** - அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு **போட்டி** - அதில் வெற்றி பெறுங்கள்.
- வாழ்க்கை ஒரு **கலை** - அதை அழகு படுத்துங்கள்.
- வாழ்க்கை ஒரு **வேதனை** - அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
- வாழ்க்கை ஒரு **சவால்** - அதை எதிர் நோக்குங்கள்.
- வாழ்க்கை ஒரு **சோகம்** - அதைக் கண்டு மனம் தளராதீர்கள்.
- வாழ்க்கை ஒரு **பிரச்சனை** - அதற்குத் தீர்வு காணுங்கள்.

**ஞா. நிறஞ்சினி,** பருத்தித்துறை.

## என் கனவு

எனது பெயர் வே.யுவராணி. சுந்தரபுரம் JRS மாலை நேரக் கல்வி மையத்தில் கல்வி கற்கின்றேன். என் கனவு எதிர் காலத்தில் ஒரு ஆசிரியராக வேண்டும் என்பதாகும். குடும்ப நிலை காரணமாக எனது அண்ணாவால் ஒன்பதாம் தரம் வரைதான் படிக்க முடிந்தது. நான் எட்டாம் தரம் படிக் கின்றேன். எனக்குக் கீழ் நான்கு சகோதரர்கள். நான் நன்றாகப் படித்தால்தான் என் சகோதரர்கள் என்னைப் பார்த்துப் படிப்பார்கள். அதனால் நான் இப்போதிருந்தே நன்றாகப் படித்து வருகின்றேன். என் கனவுப்படி நான் ஆசிரியராக வந்தால் என் குடும்பத்தின் துயரைத் துடைப்பேன். என் சகோதரர்களையும் படிக்க வைப்பேன். என் கனவு நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வே.யுவராணி,** சுந்தரபுரம்.

*தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே, தோல்வியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றது.*

**மு.தர்ஸிகா,** சமயபுரம்.

## நீ நாளைய நாயகன்

இளைஞனே நில்!
நீ நாளைய உலகின் நாயகன்
உனது ஒவ்வொரு அடியும் முன்னேற்றப்
பாதையின் முன்னோக்கிய அடியாகட்டும்!

சிறந்த உன் சிந்தனைத் துளியை,
நீ சிந்திக்காமல் சிதைக்காதே!
உன் ஆக்கங்களை அழிவுப்
பாதையை நோக்கி அள்ளி வீசாதே!

இளைஞன் உந்தன் இனிய மொழியும்,
சிறந்த செயற்பாடும் ~ புதியதோர்
உலகத்தைச் உருவாக்கிடலாம்!

நீ செல்லும் பாதையில் முட்களும்
முளைக்கலாம், பல தடைகளும் வரலாம்.
ஆனால் முன்னேறத் துடிக்கும் உன்
சக்திக்கு முன் அவை யாவும்
வெறும் தூசியாகும்!

மனிதத்தை மதி, மானிடத்தைப் பேணு
நட்பைப் பூசி, நாணயமாக வாழப் பழகு
நாளைய உலகம் உனது கையில்
நாளைய நாயகனாவதற்கு நீ இன்றே
விரைந்து செயற்படு இளைஞனே!

**B. கீதா,** பம்பைமடு.

## என் கனவு

செல்கள் வெடிக்காத தேசமொன்றை
நாம் பெற்றிட வேண்டும் - அங்கே
கட்டிடங்கள் இல்லா மர நிழலில்
கல்வி கற்றிட வேண்டும்!
பொற்குடம் போல் பெறுமதி வாய்ந்த
பட்டம் பெற்றிட வேண்டும்!
லஞ்சம் கொடுக்காமலே பதவி
பெற்றிட வேண்டும்!
கள்ளம் கபடமில்லா மாந்தரோடு
கனிந்து பழகி கடமையாற்றிட வேண்டும்! அங்கே
கஞ்சியைக் குடித்துக் கானகத்திலே கானம் பாடி
மகிழ்ந்திட வேண்டும்! அதில் கண்கள் காணாத
கடவுளைக் கருத்தில் போற்றிட வேண்டும்!
அங்கே கண்கள் காணுகின்ற எம்
பெற்ற தெய்வங்களுக்கு சேமம் செய்து
கொண்டே ஆனந்தம் பெற்றிட வேண்டும்!
சொந்தமெல்லாம் கூடி மகிழ்ந்து கூத்தாடி
சொர்க்கத்தைப் படைத்திட வேண்டும்!
அங்கே மூவினமும் ஓரினமாக
ஒற்றுமை ஓங்கிட வேண்டும்!
இந்த சொர்க்கபுரியைப் பார்த்தவர்
எல்லாம் மெச்சிட வேண்டும்!



**K. தேவமணி,** கதிரவெளி.

என்க்குள் கல்வியை விதைக்க வேண்டும்!
இலட்சியமாக அதை எடுக்க வேண்டும்!
இராப் பகலாகப் படிக்க வேண்டும்!
இடையில் பாதை மாறாமல் பயணமதை
முடிக்க வேண்டும்!
எல்லைதொடும் போது தாய், தந்தை பிறர்
கனவுகளைத் துடைக்க வேண்டும்!


**து. கலைவாணி,** வவுனியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயன்று பார்



வெற்றி வெற்றி என்று முன்னோக்கிச் செல்
திடமாக வெற்றியடைவாய்!
தோல்வி என்பது நிரந்தரமல்ல,
வெற்றியின் காலதாமதம்
முயன்று பார் – மூச்சு விடும்
முன் மண் தூசியையும்
மலையாக்கி விடலாம்!

எதையும் தடைக்கல்லாக
நினைக்காதே, வெற்றியின்
படிக் கல்லாக நினை
வாழ்க்கையில் உயர்வாய்!

**ம. மதுசா,** மறவன்குளம்

❖❖❖

## பொதுவான விடயங்கள்

உள்ளக விளையாட்டுக்கள்
***சதுரங்கம், மேசைப்பந்து, கரம், பூப்பந்து***

கிராமிய விளையாட்டுக்கள்
***கிளித்தட்டு, கிட்டியடித்தல், வாரோட்டம், சடுகுடு, போர்த் தேங்காய் அடித்தல்***

சுவட்டு விளையாட்டு
***100 மீட்டர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், மரதன் ஓட்டம்***


மைதான நிகழ்ச்சி
***குண்டு எறிதல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பருதி வட்டம் வீசுதல்***

| | | |
|---|---|---|
| ***கரப்பந்தாட்டம்*** | – | ***6 பேர்*** |
| ***வலைப்பந்தாட்டம்*** | – | ***7 பேர்*** |
| ***உதைப்பந்தாட்டம்*** | – | ***11 பேர்*** |
| ***துடுப்பாட்டம்*** | – | ***11 பேர்*** |

**சூ. சபிதா,** மு/அம்பலவன்பொக்கணை.

❖❖❖

## அகரத்தில் என் கனவு



அன்பான பாலகனே
ஆறுதலைத் தாருமையா!
இனிதான வாழ்வுதனை
ஈந்தெமக்கு ஆளுமையா!
உலகுடன் வாழ்வதற்கு,
ஊன்றுகோலாய் வாருமையா!
எம்மவர் கனவு ஏற்றம் பெற
ஏணியாக உதவுமையா!
ஐயம் தீர்ந்து நாம்
ஒன்றாக உமைப் போற்ற
ஓர் குலமாக வாழச் செய்யுமையா!
ஔடதமாக எமைக் காத்து
(அ)ஃதே வாழச் செய்யுமையா!

**அ. டிலூக்யூட்,** கொக்குபடையான்.

> *அடக்கம் ஓர் அணிகலன் மட்டுமன்றி*
> *அது ஒழுக்கத்தின் பாதுகாப்புமாகும்.*

## எதிர்காலக் கனவு

நான் ஓர் வைத்தியரானால் மிகவும் மகிழ்ச்சியடைவேன். ஒவ்வொரு மனிதனுக்கு பாரபட்சமின்றி மருந்து கொடுப்பேன். எனது எதிர்காலக் கனவு சிறந்த வைத்தியராகி மக்கள் அனைவருக்கும் சேவை ஆற்றுவதாகும்.

எனது இலட்சியக் கனவினை எய்துவதற்காக இப்போதிருந்தே நான் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்திவருகின்றேன். உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பாடம் பயின்று பல்கலைக்கழகம் வரை சென்று சிறந்த வைத்தியனாவேன். நோயினால் அல்லலுறும் நோயாளர்களை அன்புடனும், கருணையுடனும் பராமரித்து அவர்கள் நோய் குணமாக அயராது பாடுபடுவேன். நோயாளிகள் வைத்தியசாலைக்கு வரமுடியாத அளவிற்கு உடல்நிலை மிக மோசமாக இருந்தால், அவர்கள் இருக்குமிடம் நாடிச் சென்று வைத்தியம் செய்வேன். ஓய்வு நேரங்களில் பல பாடசாலைக்குச் சென்று, அங்குள்ள மாணவர்களுக்கு சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றி அறிவுரை கூறுவேன்.

***தி. இராஜேஸ்வரி,*** தேவர்குளம்.

❖❖❖

## தெருக்குறள்

- அறிவுக் குறைவே துன்பத்துக்கெல்லாம் காரணமென்பதால் அறிவே தெய்வம் எனலாம்.
- உறவின் சர்ச்சையில் நீதி தீர்க்கப் போயின் ஒரு பகுதியோடு பகை கொள்ள நேரும்.
- தீயது தேடி வரும். நல்லதை நாம்தான் தேடிப் போக வேண்டும்.
- ஆசை உணர்ச்சிகளால் கட்டிய கட்டுக்களை அவிழ்த்துவிட்டால் ஆனந்தம் சிறகடிக்கும்.
- நல்ல நண்பனாக கடமையைத் திருப்தியாக செய்த இன்பம் எந்த நண்பரிடமும் இல்லை.
- சும்மாயிருந்து சுகமாக வந்து சேர்ந்து, சேமமாக வாழ்ந்தவர் யாருமில்லை.
- கடமைகள் எவையென தெரிந்து கொள்வதே வெற்றி உடமையின் ஆரம்பம்.
- நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடுவெனும் நிலைமை, அநியாயக்காரனுக்கு துணைபோகும் நிலையாகும்.
- புண்ணியம் புரிந்தால், கண்ணியமான வாழ்நாள் எண்ணிக்கையில் நாளொன்று கூடும்.

**சூசை எட்வேட்,** அன்புவழிபுரம்.

> ***எல்லா மனிதர்களிடமும் இறைவன் இருக்கின்றான்.***
> ***ஆனால் எல்லா மனிதர்களும் இறைவனிடம் இல்லை.***



*உயரமான கட்டடங்கள் உள்ள நாடு –* **நியூயார்க்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் பயணம்

அவசர அவசரமாக ஓடி வந்து துள்ளிக் குதித்து ரயிலில் ஏறுகின்றான். மூச்சிறைக்கத் தேடிப் பிடித்து தன் ஆசனத்தில் அமர்கின்றான். கண்களை மூடி மூச்சை இழுத்து நிறுத்தி சில நிமிடங்கள் விடுகின்றான். ரயிலின் அசைவையும், பயணிகளின் சத்தத்தையும் ரயிலின் வேகத்தால் ஏற்பட்ட காற்றையும் கண்களை மூடியபடியே ரசிக்கின்றான்.

கனவில் உச்சரிப்பது போல யாரோ தனது பெயரை உச்சரிப்பதை அவன் உணர்கின்றான். அதே குரல், மிகப் பரிச்சயமான குரல். கண்களைத் திறந்தால் அது கேட்காமல் போய்விடுமோ என்ற பயத்தில் கண்களைத் திறக்காமலே இருக்கின்றான். "என்னை ஞாபகம் இருக்கிறதா?" என குரல் கேட்கின்றது. "நினைவு விட்டு அகன்றால் தானே ஞாபகப்படுத்துவதற்கு" என மனதிற்குள் சொல்லிக் கொள்கின்றான். தன்னை யாரோ தொட்டு உலுக்குவதை உணர்கின்றான். கண்களைத் திறந்து பார்க்கின்றான். அவளேதான், தன் எதிரே இரண்டு குழந்தைகளோடு இருப்பவள் அவளேதான்! அவனுக்கு வியர்த்து வடிகின்றது. தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. பேயைப் பார்த்தவன் போல் முழிக்கின்றான். இரண்டு பேர் கண்களும் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றன. எத்தனையோ உயிர் பெற்ற எண்ணங்கள் உள்ளத்தில் வந்து மறைகின்றன. அமைதியாகப் பல நிமிடங்க்ள கழிந்தன. அவன்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

"சந்துரு எப்படி இருக்கின்றீர்கள்?" "ம்... நல்லா, நீ?" என்ற நிலையில் அவன் பதில் முடிந்தது. "என் கணவருக்காக அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற விருதினைப் பெறுவதற்காக நான் கொழும்பு சென்று கொண்டிருக்கின்றேன்." என அவள் தொடர்ந்தாள். "உன் கணவர்..." "இறந்து விட்டார்" என்றாள். "எப்படி" அவன் நிலை தடுமாறி சொற்கள் உதட்டில் வந்தது. "வடக்கில் ஏற்பட்ட யுத்தத்தின் போது..." எனக் குழந்தையின் தலையைத் தடவிக் கொண்டு கண்களில் கண்ணீரோடு தன் கதையைச் கூறிக் கொண்டிருந்தாள்.

கல்லூரி வாழ்க்கை மனக் கண் முன் வந்து மறைந்தது. அவன் அன்பு வாசனா அவனிடம் வந்து அழுது புலம்பியது. "எங்க அத்தார் இராணுவத்திலிருந்து வந்திருக்கின்றார். எனக்கும் அவருக்கும் அடுத்த வாரம் கல்யாணம். நான் இனிமேல் கல்லூரிக்கு வரமாட்டேன். இந்தக் கல்யாணம் நடக்கவில்லையென்றால் வீட்டில் எல்லோரும் செத்துப் போயிடுவார்கள். எனக்கு வேற வழி தெரியவில்லை" என அவள் கூறியபோது அவனுள் அன்று செத்துப் போன உணர்வு, இன்று உயிர் பெற்றது போல இருந்தது.

அன்றிலிருந்து இன்று வரை வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் எந்த வேலையிலும் நிரந்தரமில்லாமல் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் கட்டபிரமச்சாரி. அவன் நண்பர்க ளுக்கு அவன் தத்துவம் பேசி அலையும் யதார்த்தமற்ற பைத்தியக்காரன்.

அந்தப் பன்னிரெண்டு மணி நேர ரயில் பயணத்தில் அந்த இரு குழந்தைகளும் அவனோடு ஒட்டிக் கொள்கின்றன. 10 ஆண்டுகள் தனிமை அவனிட மிருந்து முழுமையாக மறைந்து புது மனிதனாகப் பிறவி எடுக்கின்றான். ரயில் பயண முடிவில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்குகின்றான். அவர்களது வாழ்க்கைப் பயணம் தொடங்குகின்றது. இதுவரை அவன் ஊர் சுற்றி. இனிமேல் அவன் வாழ்க்கைச் சிற்பி.

ஆக்கம்: **Fr. வின்னி ஜோசப்.**

✤✤✤

## கனவுகளோ ஆயிரம்

இயற்கையில் எழில் கொஞ்சும்
ஈழமதில் திருமலையில் உதித்த
சிறுமி நான் – என் கனவோ ஆயிரமாயிரம்

காரிருள் வானில் மின்மினி போல்
கல்வி பயின்று கல்விமான் ஆவேனோ!
என் கூரிய எழுதுகோலின் சாயல்,
கவி எழுதும் கவிமணியாவேனோ!

அவனியெங்கும் அவல நிலை
அல்லலுறும் அளவில்லா உள்ளங்களை
அமைதி வழி காட்டி, அனைவரையும்
அணைத்திடுவோம் விடிவு வேண்டி!

பிஞ்சு உள்ளங்களின் விரக்தியை அழித்து
மகிமையுடன் வாழ வைக்கும்
இயேசு சபை அகதிப் பணியே! பிஞ்சு
நெஞ்சங்களில் சத்தியத்தை நிறுத்திடுவாய்!



வையகத்தில் பிறந்த நாம் வாழ்வாங்கு
வாழ்வதற்கு குத்து விளக்காக விளங்கும்
புலவர்களின் புகழை ஈட்டிடுவோம்!
எங்கள் உள்ளக் கோவிலில் ஊற்றெடுக்கும் கனவுகள்
முற்றுப்புள்ளியில்லா முகவுரையாய் தொடர்கின்றது. – என்
கனவு விடியலே என் கனவுகளோ ஆயிரமாயிரம்!

**சி. விதுர்சனா,** பாரதிபுரம்.

✤✤✤

## என் கனவே!

என் மனதில் ஆழமாகப் பதியும்
என் கனவே என் இலட்சியக்
கனவும் நீதான்!
என் எதிர்காலம் சிறந்திட
நான் கண்ட கனவு நீ!
கல்வி எனும் கனவு நீதான்
பல மானிடர் உயர
உதவும் கனவும் நீதான்.
என் எண்ணம் நிஜமாக
உதவும், கனவும் நீதான்!
என் இலட்சியம் நிஜமாக வேண்டும்!
எம் வாழ்வு வளமாக வேண்டும்!
எம் வாழ்வு துக்கம் எனும் கடலில்
இருந்து மீள வேண்டும்! - சந்தோஷக்
கடலில் மிதக்க வேண்டும்!

**கௌ. சுஜந்தன்,** சிவசக்திபுரம்.



உலகின் மிகப் பழைய விளையாட்டு – **போலோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாண்டு வாழ்க!

அருப்பேவின் கனவை நனவாக்க
அவர் வழி நின்று எம் நாட்டில்
பணியாற்றி – இடம் மாறிச் செல்கின்ற
எம் இனிய தந்தையே உமக்கு
என்றும் என் நல்வாழ்த்துக்கள்!

யுத்தமும் சுனாமியும் சுழன்றடித்து
சுக்குநூறாக்கிய – எம் வாகரை மக்கள்
மீது நீங்கள் கொண்ட பேரன்பை எண்ணி,
மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்!

மாதாந்தச் சந்திப்புகளில் பங்கு கொண்டு
நீங்கள் நல்கும் தத்துவார்த்தக்
கருத்துக்களை தனிமையிலிருந்து
சிந்தித்துப் பார்த்தால் புரிகிறது
தந்தையே அதனது தார்ப்பரியம்!



ஜாதி, மத பேதமின்றி அனைவருக்கும்
சேவைதனை வழங்க வேண்டும்
என்ற உங்கள் வார்த்தை எம்
மனதிலே எதிரொலிக்கின்றன!

கல்விப் பணியதிலே கண்ணியமாக சேவையாற்ற
பயிற்சிகளை நல்கி வளப்படுத்திய உங்களை
வாழ்நாளில் மறக்கமாட்டோம்!

கடல் கடந்து பணி செய்ய அயல் நாடு
சென்றாலும், அடிக்கடி இங்குவந்து
ஆறுதல் பல சொல்லி எம்மை
ஆற்றுப்படுத்த வேண்டும் தந்தையே!

**கணபதிப்பிள்ளைரூபன்,** கதிரவெளி.

## நிச்சயம் நிறைவேறும் கனவு

எங்கு பார்த்தாலும் மலர்ந்த முகம்
நான் காண வேண்டும்!
மனித நேயமுள்ள மனிதனை
நான் பார்க்க வேண்டும்;
அதுதான் என் கனவு!
விழியில்லா முகம் வேண்டாம்.
நல் அன்பு மொழி பேசும்
மனித முகம் நான் காண
வேண்டும்! - அதுதான் என் கனவு
செல்வம் ஏதும் எனக்கு வேண்டாம்.
நல் நிம்மதி மட்டும் போதும்.
இவ் என் கனவு நிச்சயம் நிறைவேறும்!



**தே. தேனுஜன்,** பிள்ளையார்பிட்டி.

## வெற்றிச் சிந்தனைகள்

★ உன் வாழ்வு சிறக்க வேண்டுமெனில் உன் வாய்க்குப் பூட்டுப் போடு.

★ கடவுளைத் தேடு, அத்தனையும் உன்னைத் தேடும்.

★ வரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்து, கிடைக்காத சந்தர்ப்பத்தைப் பற்றிக் கவலைப்படாதே.

★ எந்த விடயமானாலும் அளவாகப் பேசு, அளவை மீறினால் நஞ்சாகிவிடும்.

**T. நளினி,** மாளிகைப்பிட்டி.

## நல்ல ஆசான்

நல் ஆசானுக்கு அகத்திலே அன்பு வேண்டும்,
தன் முகத்திலே கருணை வேண்டும்!
ஆணவம் சிறிதுமின்றி ~ நல் ஆசானாகத் பார்
போற்றத் திகழ வேண்டும்!
புதுமைகள் படைக்க வேண்டும்,
கல்வியில் புதுமைகள் புகுத்த வேண்டும்!
புத்தியுள்ள ஆசானாக நாளும்,
புரட்சியுடன் பேச வேண்டும்!
கணிக்கும் போது நேர்மை வேண்டும்
கடமை உணர்வு தொழிலில் வேண்டும்!
கால விரயமின்றி நாளும்,
கற்பித்தலைச் செய்ய வேண்டும்!

**லோ. கேனகா,** ம/ட் பறங்கியாமடு.

## கனவு பூமி

விரிந்த வானே, வெளியே, – எங்கும்
விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும், புனலும், – மண்ணும்,
செந்தீ யாவும் தந்தாய்,
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!



அசைவைச் செய்தாய், ஆங்கே – ஒலியாம்
அலையைச் செய்தாய், நீயே!
நசையால் காணும் வண்ணம் – நிலமே
நான்காய் விரியச் செய்தாய்!
பசையாம் பொருள்கள் செய்தாய்! – இயலாம்
பைந்தமிழ் பேசச் செய்தாய்!
இசையாம் தமிழைத் தந்தாய் – பறவை,
ஏந்திழை இனிமைக் குரலால்
என் கனவில் உதித்த யுத்தமற்ற பூமியை
இயற்கைத் தாயே ஏன் உன்னால்
இன்னும் தர முடியவில்லை?

## என் கனவு நனவாக...

என் கனவு நனவாக
என் நாளும் இறைவனிடம்
இதமாகப் பிரார்த்திக்கின்றேன்,
இன்பமாக வந்து தங்கிடவே!

முன்பள்ளி மாணவனாக
முன்னாளில் நான் பயின்று,
இன்று பாடசாலை சிறுவனாக
பயில்கின்றேன் பாடங்களை!

எதிர் காலம் ஒளி பெறவே,
ஏற்றம் பெற்று வாழ்ந்திடவே,
இங்கிதமாக பாடங்களை
இன்பமுடன் பயில்கின்றேன்!



பல கலைகள் நானும் கற்று,
பல்கலைக்கழகம் சென்று,
பொறியியலாளனாக நானும்,
பொறுப்புடன் உழைத்திடவே
அன்பான இறைவனிடம்
அனுதினமும் வேண்டுகின்றேன்!

**கு. அன்ரனி ரீறோன்,** கொக்குபடையான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனை முத்துக்கள்

- ஆசிரியர்கள் முன் கீழ்படிந்து கற்பவரே உயர்ந்தவராவார்.
- பெற்ற தந்தைக்கு செவி சாய்த்து அவரைக் மகிழ்ச்சியடையச் செய்.
- முதியவர் எவரையும் இகழாதே, நாமும் ஒரு நாள் முதுமையடைவோம்.
- கைவிடப்பட்டவருக்குத் தந்தையாயிரு. ஒதுக்கப் பட்டோருக்கு தாயாயிரு.
- எந்தத் தொழிலிலும் இழிவில்லை. தொழில் எதுவும் செய்யாமலிருப்பதுதான் இழிவாகும்.
- உன் கௌரவம் உன் நாக்கின் நுனியில் இருக்கின்றது.
- நல்ல ஆரம்பத்தைக் கண்டடைபவன் நல்ல முடிவையும் கண்டடைவான்.
- அன்பு தானாக வருவது, அதனை யாராலும் விலைக்கு வாங்க முடியாது.

ஆ. நிரோஜினி, வாகரை.

### பேதுரு அருப்பே

அன்பு என்பது வல்லமை
அர்த்தம் அளித்திடும் ஆற்றலே;
அன்பு என்றும் மலருமே,
அண்ணல் அருப்பேயின் கனவிலே!

நின்று நிலைக்கும் எதுவுமே
அன்பு உருவம் கொடுத்து,
தன்னை வழங்கிய அருப்பேவின்
உள்ளத்தை வாழ்த்தி போற்றுவோம்!

உயிர்கள் அனைத்துமே வாழ்ந்திட - தம்
உயிரைக் கொடுத்த இவரையே
வாழும் தெய்வம் என்றுதான்
வாழ்த்திப் போற்றிப் பாடுவோம்

S. நளாயினி, சுந்தரபுரம்.

## நோய்க் காரணிகள்



| | | |
|---|---|---|
| மலேரியா | - | நுளம்பு |
| யானைக்கால் | - | நுளம்பு |
| மஞ்சள் காய்ச்சல் | - | நுளம்பு |
| பிளேக் | - | தெள்ளு |
| எயிட்ஸ் | - | வைரஸ் |
| தடிமன் | - | வைரஸ் |
| வாந்திபேதி | - | ஈக்கள், நீர் |



K. அனுஷா, பறங்யாமடு.

## எப்படிப் படிக்கப் போகின்றீர்கள்


சிலருக்கு அதிகாலையில் எழுந்து படித்தால் தான் மனதில் நிற்கும். சிலருக்கு மாலை வேளையில் படிக்கத்தான் விருப் பமிருக்கும். எந்தச் சூழ்நிலையில் படித்தால் பிடிக்கின் றதோ அந்த நிலைக்கு ஏற்றது போல் படிக்கலாம். அதில் எந்த தவறுமில்லை.

கு. அலன்டன், கோப்பாய்.

## மாணவர் விடியலே!

அன்பின் மாணவர் விடியலே
தினம் ஒரு மாதம்
என் கையில் தவள்வது
வாழ்வின் மற்றைய இன்பமாகும்!

பற்பல கவிதைகள், –
பல கட்டுரைகள்; பல
வண்ண வண்ண ஆக்கங்கள்
எல்லாமே சுமந்து வருபவன் நீ!



வாழ்வுக்குச் சிந்தனைத் துளிகள்,
கல்விக்கு அறிவுச் சிந்தனைகள்,
வாழ்வுக்கு வழி வகைகள்,
உன்னிடம் மட்டுமே உள்ளது!

மாணவ விடியலே உனை
தினம் நான் கையில்
ஏந்தி மகிழ – இறைவனே
துணை செய்ய வேண்டும்!

ஆ. யஸ்மின், அச்சுவேலி.

## இனிய சிந்தனைகள்

- கவலைகள் முகத்திலுள்ள அழகைக் கெடுத்து விடுகின்றன.
- வாழ்க்கை முழுக்க நாம் தேட வேண்டியது அறிவை மட்டுமே.
- உற்சாகம் கைவசமிருந்தால் வெற்றி உங்கள் சட்டைப் பைக்குள்.
- மனிதனுக்கு ஏற்படும் கோபம் அவனின் முன்னேற்றத்துக்கு தடையாகின்றது.

ச. சௌமியா, அச்சுவேலி.

## புரட்சிக் கனவு

அன்போடிருந்து அகிலத்தை ஆட்சி செய்ய
ஆயகலைகள் அறுபத்துநான்கிலும் தேர்ச்சியுற்று
இறையன்பிலும் பிறரன்பிலும் சாட்சிய வாழ்வு வாழ
ஈகை செய்து இனிதாக இனபமுடன்
சேவை செய்வதே என் கனவு!

உன்னதத்திற்கு உப்பாய் விளங்கிட
ஊனமுற்றோரின் ஆறுதலாகத் திகழ்ந்திட
என்னையே அர்ப்பணித்துத் தியாகமுடன்
ஏற்றம் பெற்ற வாழ்வை ஏழைகளுக்கு
ஏணியாய் அளித்திடுவதே என் கனவு!
ஐயமின்றியே குலத்தின் சிற்பியாய்
ஒளி விளக்கின் திரியாக என்னையேயளித்து
ஓலங்களைப் போக்கியே ஒற்றுமையைப் பேணி
ஔவியம் உரைக்கும் மானிடராய் உலகத்தை
மாற்றியமைத்தலே என் கனவு!

சி. மேரி டிஷாந்தினி, பெரியமுறிப்பு.

## உனது வாழ்வுக்கு



| | | | | | |
|---|---|---|---|---|---|
| நட | - | பண்பாக | சிந்தி | - | சுயமாக |
| பேசு | - | பணிவாக | வாழு | - | இயல்பாக |
| உண் | - | அளவாக | மரணி | - | பயமின்றி |
| பழகு | - | நாகரிகமாக | படி | - | முடிவின்றி |
| சுவாசி | - | ஆழமாக | நம்பு | - | சரியாக |
| உழை | - | உண்மையாக | | | |



ச. சஜீவன், ஆசிகுளம்.



அனுவைப் பிளந்து காட்டியவர் – ரூதர்போர்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்

- பணம் பேச ஆரம்பித்தால் உண்மை ஊமையாகிவிடும்.
- தேங்கி நிற்கும் நீரில் கொசுக்கள் உற்பத்தி யாகின்றன. சோம்பி நிற்கும் மனிதனிடம் துன்பங்கள் உற்பத்தியாகின்றன.
- தேளுக்குப் பின் பக்கம் விஷம். பாம்புக்கு முன் பக்கம் விஷம். மனிதனுக்கு நடுவிலே விஷம்.
- எதைச் சிந்திக்கிறாய் என்பதில்லை, எப்படி சிந்திக்கிறாய்? என்பதில்தான் புதிய கருத்துக்கள் வெளியாகின்றன.
- மனித முயற்சியால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு முயலுங்கள்.
- வேகமாக ஓடத் தொடங்கும் போது, வேகத் தடைகளின் மேல் ஒரு கண் இருக்க வேண்டும்.
- உங்களுக்கு அளிக்கப்பட்ட வேலையை புனிதமாக, இறை நம்பிக்கையுடனும், இதய பூர்வமாகவும் செய்யுங்கள்.
- கடுமையாக மற்றவர்கள் உங்களிடம் பேசினாலும், அவர்களிடம் அமைதியாக பேசுங்கள்.
- மனிதர் மீது நம்பிக்கை வையுங்கள். அதைச் செயலிலும் காட்டுங்கள். பெரும்பாலும் அவர்கள் நேர்மையாகவே நடந்து கொள்வார்கள்.
- கடலில், நாணல் தட்டைகள் மிதக்கும். முத்துக்கள் ஆழத்தில் மறைந்தே கிடக்கும், அதனை நாம்தான் தேட வேண்டும்.
- ஒரு நண்பனைச் சந்தேகிப்பது, அவனால் ஏமாற்றப்படுவதை விட மோசம்.
- நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதோ ஒருவகையில் நம்மைவிட மேலானவர் என்று நினைப்பது நல்லது.
- தனக்குள் போராட்டம் ஆரம்பமாகும் போதுதான், மனசாட்சி இருக்கின்றது என்பது உறுதிப் படுகின்றது.
- அன்போடு கொடுக்கும் தண்ணீரும் அமுதமாகும்.
- தேடுகின்றவன் காண்கின்றான். காண்கிறவன் பெறுகின்றான்.

## Proverbs - பழமொழிகள்

- The fear of the Lord is the beginning of knowledge.
  இறைவனுக்கு அஞ்சுதலே அறிவின் தொடக்கம்.
- Family is more sacred than the state.
  நாட்டை விடக் குடும்பம் புனிதமானது.
- The just should live by faith.
  நேர்மையானவர் நம்பிக்கையால் வாழ்வார்.
- Experience is the mother of wisdom.
  அனுபவமே அறிவின் தாய்
- Do as you would be done by.
  உனக்கு செய்யப்பட விரும்புவதைப் போலவே நீ பிறருக்குச் செய்.
- A good tongue is a good weapon.
  நல்ல நாக்கு ஒரு நல்ல ஆயுதம்.
- Thoughts elevate a man.
  எண்ணங்கள் மனிதனை உயர்த்துகின்றன.
- Time is money.
  காலமே சிறந்த செல்வம்.
- The world is his who enjoys it.
  உலகம் அதனை இன்புற அனுபவிப்பவனுக்கே.
- Youth comes but once in a lifetime.
  இளமை வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும்.
- Without wisdom, wealth is worthless.
  விவேகம் இல்லாச் செல்வம் வீணே.
- Where there is a will there is way.
  மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.
- He who lives by the sword, dies by the sword.
  வாளால் வாழ்பவன் வாளால் வீழ்வான்.
- The poor live recuse.
  ஏழை நிம்மதியாக வாழ்கின்றான்.
- Bad manners bring bad luck.
  தீய நடத்தை துரதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும்.



மதர் திரேசாவின் முழுப் பெயர் - மேரி திரேசா பாஞ்ஜாகீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு போட்டா போட்டி – 26

1. திரவ நிலையில் உள்ள ஒரே உலோகம் எது?
2. இலங்கையில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
3. மிகப் பெரிய கண்டம் எது?
4. பால்வெளி மண்டலத்தில் உள்ள சூரியன் ஒரு நட்சத்திரமா அல்லது கோளா?
5. இரத்த அணுக்களின் வளர்ச்சிக்கு உதவும் விட்டமின் எது?
6. மூளை வேலை செய்ய அதிமுக்கியமாக என்ன தேவை?
7. நிறத் தொலைக்காட்சிகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை மூன்று நிறங்கள் எவை?
8. முதன் முதலில் ஒலிம்பிக் விளையாட்டில் பதக்கம் வென்ற இலங்கை வீராங்கனை யார்?
9. உலகில் அதிக ஆண்டு வாழும் மக்கள் யார்?
   (A) இந்தியா (B) மலேசியா
   (C) ஜப்பான் (D) இலங்கை
10. ``உயிர்களிடத்தே அன்பு வேண்டும்.`` தெய்வம் உண்மை யென்பது தானறிதல் வேண்டும்' என்று பாடியவர் யார்?
   (A) இளங்கோவடிகள் (B) பாதிதாசன்
   (C) பாரதியார் (D) வைரமுத்து

## பொது அறிவு போட்டா போட்டி – 25 விடைகள்

1. கல்சியம்
2. வியர்வைச் சுரப்பி
3. அமெரிக்கா
4. ஜப்பான்
5. காளிதாஸ்
6. பயோட்டின்
7. நாய்
8. எலும்பு மஜ்ஜை
9. (D) சீனமொழி
10. (A) நிமிடத்துக்கு 72 தடவை

### 07 மதிப்பெய்கள் பெற்று பரிசு பெற்றவர்கள

**S. அருள் ராஜ்,** பள்ளிமுனை.
**J. லூசியா,** பள்ளிமுனை.
**சி. மேரி இவாஞ்சலின்,** பள்ளிமுனை

### முயற்சித்துப் பாருங்கள்

ஒரு எண்ணை 9ஆல் வகுத்தால் மிகுதியாக 8ம்,
8ஆல் வகுத்தால் மிகுதியாக 7ம்,
7ஆல் வகுத்தால் மிகுதியாக 6ம்,
6ஆல் வகுத்தால் மிகுதியாக 5ம்,
5ஆல் வகுத்தால் மிகுதியாக 4ம்,
4ஆல் வகுத்தால் மிகுதியாக 3ம்,
3ஆல் வகுத்தால் மிகுதியாக 2ம்,
2ஆல் வகுத்தால் மிகுதியாக
1ம் வரும் எண் யாது?

விடை – **2519**

# விடுகதையும் விடையும்

1. கறுப்புத் தோட்டத்தில் வெள்ளை விதைகள். அறிவுக்கு விருந்தாகும் அடுத்த நாள் புதிதாகும். அது என்ன?
2. எவர் கையிலும் சிக்காத கல், யாராலும் கையில் எடுக்க முடியாத கல். அது என்ன?
3. ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக் கிடப்பான். அவன் யார்?
4. தள்ளாடித் தள்ளாடிப் போனாலும் தவறாமல் ஊர் போய்ச் சேருவான் அவன் யார்?
5. எல்லோருக்கும் கொடுப்பான். அவனுக்கென்று ஒன்றும் வைத்திருக்க மாட்டான். அவன் யார்?

**இ. பியாந்தி,** குமானயாங்குளம்.

6. காற்று இல்லாமல் பறக்க மாட்டான் இந்தக் கண்ணாடி உடம்புக்காரன் அவன் யார்?
7. ஒற்றைக் கண்ணை வைத்துக் கொண்டு ஓடியாடி வேலி அடைக்கின்றான். அவன் யார்?
8. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை. அது என்ன?
9. ஆட்டத்தில் அசர வைப்பான், ஆனால் பாம்பை மட்டும் பதற வைப்பான். அவன் யார்?
10. தண்ணீருக்குள் உற்சாக ஊஞ்சலாட்டம், தரையில் உயிர் ஊசலாட்டம். அது என்ன?

**N. நிக்கோலா,** தோட்டவெளி.

## விடைகள்

1. கரும்பலகை, வெண்கட்டி
2. விக்கல்
3. துடைப்பம்
4. படகு
5. அகப்பை
6. பலூன்
7. ஊசி
8. பட்டம்
9. மயில்
10. மீன்

### மனிதனின் எடை

மனிதனின் எடை பூமியில் நிலையானது. வேறு கிரகங்களில் மனித எடை மாறுபடும். பூமியில் 60 கிலோ எடையுள்ள மனிதன் சூரியனில் 1680 கிலோவாக இருப்பான். வெள்ளியில் 516 கிலோ, சந்திரனில் மிகமிக எடை குறையும். அதாவது 0.987 கிலோ மட்டுமே. செவ்வாயில் 22.8 கிலோவாக இருப்பான்.

### கானல் நீர்

தூரத்தில் நீர் இருப்பதைப் போலத் போலத் தோன்றும். ஆனால் அருகில் சென்று பார்த்தால் நீர் இருக்காது. இதுவே கானல் நீராகும். "உச்சி வெயில் நேரத்தில் தார்ப் பாதையால் சென்றால் இதனைக் காணலாம்.



உலகிலேயே பெரிய பறவை – **ஆஸ்டிரிச்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் பிரதான உற்பத்திகள் நடைபெறும் இடங்கள்

| | |
|---|---|
| ⁂ பிரிமா ஆலை | - திருகோணமலை |
| ⁂ சீனித் தொழிற்சாலை | - கந்தளாய் பெல்வத்தை |
| ⁂ இரசாயனத் தொழிற்சாலை | - பரந்தன் |
| ⁂ தேயிலை ஆராய்ச்சி நிலையம் | - தலவாக்கல |
| ⁂ தெங்கு ஆராய்ச்சி நிலையம் | - லுணுவில் |
| ⁂ இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | - அகலவத்தை |
| ⁂ வைத்திய ஆராய்ச்சி நிலையம் | - கொழும்பு |
| ⁂ இரும்புருக்குத் தொழிற்சாலை | - ஒருவில |
| ⁂ டயர், டியூப் தொழிற்சாலை | - களனி |
| ⁂ சீமெந்து தொழிற்சாலை | - புத்தளம், காலி காங்கேசன்துறை |
| ⁂ பால் பதனிடும் தொழிற்சாலை | - அம்பேவல |

**ம. மினோஜன்,** இலகடிப்பிட்டி.

## ஐந்தறிவுப் பெருந்தகைகள்


- ◈ மயிர் நீப்பின் உயிர் வாழாதது – ***கவரிமான்.***
- ◈ மழைக் காலத்திற்காக மாதக்கணக்கில் உணவு சேமிப்பது – ***எறும்பு.***
- ◈ தனக்குக் கிடைத்ததைப் பகிர்ந்துண்பது – ***காகம்.***
- ◈ தன்துணை பிரிந்தால் உயிர்வாழாதது – ***மணிப்புறா.***
- ◈ தேவைக்குமேல் உணவு கிடைத்தால் திரும்பிக் கூடப் பார்க்காதது – ***சிங்கம்.***
- ◈ நன்றிக்கு எடுத்துக் காட்டு – ***நாய்.***

மேற்கூறிய ஐந்தறிவுள்ள ஜீவன்களின் உயரிய குணங்களை மனிதன் தன் ஆறாவது அறிவால் கண்டுபிடித்தானே தவிர கடைப்பிடிக்கின்றானா என்பது கேள்விக் குறியே!

**R. நுவன்,** எருக்கலங்கல்.

## ஓ இளைஞனே!

சிந்தனைகளைச் சந்தையிடும் விந்தை
உலகிலே மந்தை போல் இருக்கின்றாய்!
பூமி என்னும் பந்தைப் புரட்டிப்
போடுவது விந்தை
என்ன செய்கின்றது உன் சிந்தை
புதிய உலகம் படைப்போம்
விரைந்து வா, எழுந்து வா!



பாய்ந்து வரும் அலையும்,
தேய்ந்து போகும் பிறையும்,
பறந்து வரும் காற்றும்
உதிரும் கதிரவன் கதிரும்
ஓய்வதில்லை இளைஞனே!
வாழ்க்கையில் வேண்டும் இலட்சியம்
இல்லையேல் எல்லாம் பூச்சியம்
இதற்கு இமைதான் சாட்சியம்
இனி உந்தன் இராச்சியம்
உன் திறமைகளை விளக்கு
இவ்வுலகை நன்கு கலக்கு!

**A. சுவிந்தன்,** மணியர்குளம்.

## கனவை நனவாக்க...

வாழ்க்கை எப்போதுமே அமைதியானதாக செல்ல வேண்டும் என சாதாரண மனிதர்கள் சிந்திப்பதில் தவறில்லை. அமைதி இழந்து போவதும் அமை தியாக இருப்பதும் நமது நம்பிக்கையின் உறுதியில் தான் இருக்கின்றது. நாம் கீழே விழுந்துவிட்டால் ஒட்டிவிட்ட மண்ணைத் தட்டிவிட்டு நடக்க ஆரம்பிக்கின்றோம். வாழ்க்கையில் வீழ்ச்சி ஏற்படு கின்ற போதும் இதையே நாம் செய்ய வேண்டும். விழுவதில் தவறில்லை. நடக்கும் போதுதான் விழு கின்றோம். முயற்சி செய்யும்போதுதான் சரிவுகள் ஏற்படுகின்றன. அதனைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

நாம் நமது எதிர்காலத்தை எண்ணி பல கனவுகள் காண்கின்றோம். அதை நனவாக்க முயற்சிக்கும் போது தடைகள், சரிவுகள் ஏற்படுகின்றன. இதனால் மனமுடைந்து சோர்வடைகின்றோம். எம் கனவுகள் நனவாகாமல் அப்படியே கரைகின்றது. இச் சந்தர்ப் பத்திலே நாம் நமது நம்பிக்கையை மூலதனமாகக் கொள்ள வேண்டும்.

உட்கார்ந்து கொண்டே இருக்காதீர்கள். சரிவுகள் என்பது சாய்வதற்கல்ல. சாதனைகள் படைப்பதற் கென்றே நம்புங்கள். எழுந்து நில்லுங்கள் வீழ்வது இயற்கை, எழுந்து நிற்பதுதான் வாழ்க்கை.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையை இழக்கா தீர்கள். உங்களை நம்புங்கள். வாழ்க்கையை நம்பிக்கையுடன் நடத்தப் பழகிக்கொள்ளுங்கள். கனவுகளை நனவுகளாக்க நம்பிக்கையுடன் வாழ்க்கையை நகர்த்துவோம்.

**நா. ஹரிகரன்,** சமயபுரம்.

## விற்றமின்கள் குறைபாட்டால் ஏற்படும் நோய்கள்

| | |
|---|---|
| **விற்றமின்** A - | மாலைக் கண் நோய், தோல் வரண்டு போதல். |
| **விற்றமின்** B - | குருதிச்சோகை, பெரிபெரி நோய், நரம்புத் தளர்ச்சி |
| **விற்றமின்** C - | ஸ்கேவி நோய், பல் எலும்பு சீரற்று வளர்தல். |
| **விற்றமின்** D - | என்புருக்கி நோய் |
| **விற்றமின்** E - | மலட்டுத்தன்மை |
| **விற்றமின்** F - | குருதி உறையா நோய் |
| அயடின் - | தொண்டை வீக்கம் |

**R. தர்ஷீந்திரா,** பறங்கியாமடு.

# கருவிகளும் அவற்றின் பயன்களும்

- **அம்பியர்மானி (Ammeter)**
  மின்னோட்டத்தின் சக்தியை அளவிதல்.
- **அனிலமானி (Anemometer)**
  காற்றின் வேகத்தையும் திசையையும் அளவிடுதல்.
- **ஈரமானி (Hygrometer)**
  வளியின் ஈரப்பதனை அளவிடுதல்.
- **ஒளிமானி (Photometer)**
  ஒளிப்படம் எடுப்பதற்கு ஒளியை அளவிடும் கருவி.
- **கலோரிமானி (Calorimetrer)**
  வெப்பத்தின் அளவினை அளவிடுதல்
- **காந்தமானி (Magnetometer)**
  காந்த இயக்கத்தை அளவிடுதல்
- **மருத்துவ வெப்பமானி (Clinical Thermometer)**
  மனித உடலின் வெப்ப நிலையை அளவிடுதல்.
- **தொலைமானி (Telemeter)**
  மிகத் தூரத்தில் நிகழும் பௌதிக நிகழ்வுகளைப் பதிவு செய்தல்.
- **தொலைகாட்டி (Telescope)**
  தூரத்திலுள்ள ஒரு பொருளைத் தெளிவாகக் காட்டுதல்.
- **நிறமானி (Colourimeter)**
  நிறங்களின் செறிவை அளவிடுதல்.
- **நுணுக்குக்காட்டி (Microscope)**
  மிகச் சிறிய பொருளை பலமடங்கு பெரிதாகக் காட்டும் கருவி.
- **மழைமானி (Rain Gauge)**
  மழைவீழ்ச்சி யை அளவிடுதல்.

# நோபல் பரிசு

உலகில் மிகப் பெரிய பரிசு நோபல் பரிசு எனின் அது மிகையாகாது. இதனை உருவாக்கியவர் ஆல்.்பிரட் நோபல் ஆவார். டைனமைட் என்ற வெடி மருந்தை இவர்தான் கண்டுபிடித்தார். இதன் மூலம் அவருக்குப் பெரும் செல்வம் கிடைத்தது. இறக்கும் போது தனது செல்வத்தைக் கொண்டு ஒரு டிரஸ்ட் அமைத்து அதன் மூலம் ஆண்டுதோறும் தலைசிறந்த மேதைகளுக்கு மிகப் பெரிய பரிசளிக்க வழி செய்தார். இப் பரிசே நோபல் பரிசாகும். ஆரம்பத்தில் 1901ல் ஐந்து துறை களுக்கு வழங்கப்பட்டது. தற்போது ஏழு துறைகளுக்கு இப் பரிசு வழங்கப்படுகின்றது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், உலக சமாதானம் போன்ற ஏழு பிரிவுகளில் சாதனையாளர்களுக்கு ஆண்டு தோறும் இப் பரிசு வழங்கப்படுகின்றது.


# கனவாலும் கண்ணியமாக வாழ்!



என் இளைய நிலாக்களே!
ஈட்டியை விடவும்
கூர்மையான, ஆழமான
இதயம் உள்ளவர்களே!
உங்களுக்காகத் தானே இந்தப்
புண்ணிய பூமி காத்துக் கிடக்கின்றது.
நல்லவற்றைச் செய்து,
நல்லவராக வாழ்ந்து,
பொல்லாச் செயலை ஒதுக்கி
புன்னகையால் அனைவரையும்
இணைத்து புதுமெருகேற்றி,
நாடு போற்ற வாழ்!
இதுவே நான் காணும் கனவு!
எதற்கும் அச்சம் ஏன்?
துணிந்து எழுந்து நட
உதவிக் கரமுண்டு - கண்ணுண்டு
உண்மையே பேசு - உழை
கனவாலும் கண்ணியமாக வாழப் பழகு!

**சி. தங்கேஸ்வரன்,** இறால்குழி.

# இதுவே என் கனவு!



அகதியெனும் அடிமை நாமம் பூண்டு
அல்லலுற்றுப் பல தேசம் அலைந்து
ஊனின்றி, உறக்கமின்றி உழைத்து
வானமே கூரையாக வாழுமெங்கள்
மனிதர்க்கெல்லாம் மறுமலர்ச்சி
தருவது மாணவர் விடியலே!

ஆயிரமாயிரம் கனவுகளோடு
பிரசவமாகும் எங்கள் இரவுகள்
கலைந்து போகும் கோலங்களாகவே அஸ்தமிக்கின்றன.

போரோய வேண்டுமிங்கு - சீராக வேண்டும்!
பாரெங்கும் பஞ்சம், பசி
பறக்க ஏரோட வேண்டும்.
எம் மதமும் கூரான அறிவோடு
குறைவின்றி வாழ வேண்டும்!

**சி. சிவரஞ்சனி,** இறால்குழி.

# உங்கள் வாழ்க்கைக்கு

- வாழ்வில் முன்னேற நெஞ்சில் தைரியமும் உதட்டில் உண்மையும் இருக்க வேண்டும்.
- அலைமோதும் உள்ளத்தில் உணர்ச்சி மட்டுமே, அங்கு நின்று நிதானித்துச் செயற்படும் திறன் இல்லாது போவது இயல்பே.
- நாளைய நிரந்தர நன்மைக்காக இன்றைய தேவையைக் குறைத்துக் கொள்க.

**கி. கிஷாந்தினி,** ஆச்சிபுரம்.



அதிக எடையுள்ள உலோகம் - **இரிடியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலீஷ் ரொம்ப ஈஸி - 26

1. என்ன காரணம்? - What is the reason?
2. என்ன நடந்தது? - What happened?
3. நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களா? - Did you call me?
4. நான் போகலாமா? - May I go?
5. நான் உன்னுடன் வரலாமா? - May I accompany you?
6. நீ / நீங்கள் வருகின்றீர்களா? - Are you coming?
7. நான் கொண்டுவர வேண்டுமா? - Should I bring it?
8. தங்கள் பெயர் என்ன? - What is your name?
9. நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? - How are you?
10. புரிந்ததா? - Did you understand?
11. ஆசிரியர் உள்ளே இருகின்றாரா? - Is the teacher in?
12. யார் அது? - Who is it?
13. என்ன? - What is the matter?
14. தினேஷ் எங்கு இருக்கின்றான்? - Where is Dinesh?
15. நீ எங்கு இருந்தாய்? - Where were you?
16. எப்போது வந்தாய்? - When did you come?
17. ஆரம்பிக்கலாமா? - Do / Shall we begin?
18. ஒரு காரியம் செய்வாயா? - Will you do one thing?
19. என்ன இன்று விடுமுறையா? - Is it a holiday today?
20. உனக்குத் தெரியுமா? - Do you know?
21. என்ன விஷயம்? - What is the matter?
22. நீ போகமாட்டாயா? - Won't you go?
23. என்ன கலவரம்? - What is the trouble?
24. எதைப் பற்றிச் சச்சரவு? - What is the quarrel about?
25. உனக்குக் கோபமா? - Are you angry?
26. குடும்பம் நலந்தானா? - How is the family?
27. என்ன சொன்னீர்கள்? - What did you say?
28. நான் தங்களுக்கு என்ன செய்யலாம்?
    What can I do for you?
29. தாங்கள் சிரமப்பட்டு வந்த காரணம் என்ன?
    What brings you here?
30. உன் அபிப்பிராயம் என்ன? - What is your opinion?
31. அவரிடம் கார் உள்ளதா? - Has he got a car?
32. உனக்கு என்னிடம் ஏதாவது வேலை இருக்கின்றதா?
    Did you have any business with me?
33. யார் வருகின்றார்? - Who is coming?
34. இரவு சமையல் என்ன?
    What is the menu for the dinner?
35. அதனால் என்ன வித்தியாசம்?
    What difference does that make?
36. இது யாருடைய தொலைபேசி எண்?
    Whose telephone number is this?
37. நீ எப்போது உறங்கப்போவாய்?
    When do you go to bed?
38. நாம் எங்கே சந்திப்பது? - Where shall we meet?
39. நீங்கள் திரும்பி எப்படி வந்தீர்கள்?
    How have you come back?
40. நீ ஏன் படிப்பை நிறுத்திவிட்டாய்?
    Why have you discontinued your studies?
41. நீங்கள் என்ன தேடுகின்றீர்கள்?
    What are you looking for?
42. இப்போது உங்களுடைய தாயார் எப்படி உள்ளார்?
    How is your mother now?
43. இங்கு எந்த உல்லாசவிடுதி மிகவும் சிறந்தது?
    Which is the best hotel here?
44. இந்தத் திருவாளர் யார்? - Who is this gentleman?
45. அவன் / அவள் உடல் நலம் இப்போது எவ்வாறு உள்ளது?
    How is his/her health today?
46. வாசு எங்கே? - Where is Vasu?

Is, am, are, was, were, had, will, would, shall, should, can, could, may, might போன்ற வார்த்தைகள் வாக்கியத்தின் ஆரம்பத்தில் வந்தால், அந்த வாக்கியம் கேள்வியாக மாறுகின்றது. அவைகளே வாக்கியத்தின் மத்தியில் வந்தால் சாதாரண வாக்கியமாகின்றது.

Ex : Am I a student?
I am a student.
May I come in?
I may come in.

அது போலவே do, did என்பனவும் வாக்கியங்களில் வரும்.



உலகில் அதிகளவு தண்ணீர் ஓடும் நதி – அமேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலம் கற்கவும் பேசவும் எளிய வழி - 26

## Active Voice - செய்வினை



### Simple Tenses - தனிநிலை காலங்கள்

### Simple Present Tenses - தனிநிலை நிகழ்காலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Ex: | I study | - நான் படிக்கின்றேன். | You study | - | நீ படிக்கின்றாய். |
| | He studies | - அவன் படிக்கின்றான். | We study | - | நாங்கள் படிக்கின்றோம். |
| | You study | - நீங்கள் படிக்கிறீர்கள். | They study | - | அவர்கள் படிக்கின்றார்கள். |

**The simple present is used** தனிநிலை நிகழ்கால வினைவடிவம் வரும் இடங்கள்.



**1. To express a habitual action - பழக்கமான செயலைக் குறிக்கும்பொழுது**

Ex: I get up every day at 5 O' clock - நான் தினமும் 5 மணிக்கு எழும்புகின்றேன்.
I pray to god everyday- நான் தினமும் கடவுளிடம் செபிப்பேன்.

**2. To express the general truths - பொது உண்மைகளைக் குறிக்கும்பொழுது**

Ex: The sun rises in the east - கதிரவன் கிழக்கில் உதிக்கின்றான்.
The earth goes round the sun - பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது.

**3. In vivid narratives, as a substitute for the simple past**
**நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்ட, தனிநிலை இறந்த காலத்திற்குப் பதிலாக**

Ex: David now rushes forward and deals heavy blow to Goliath.
இப்போது தாவீது முன்னே பாய்ந்து கோலியாத்தை பலமாக அடிக்கின்றான்.



**4. To indicate a future event which is part of plan.**
**தற்கால திட்டத்திற்குட்பட்ட எதிர்கால செயலைக் குறிக்கும் பொழுது**

Ex: We go to Jaffna next week.
நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு அடுத்த வாரம் செல்கின்றோம்.

### Simple Past Tenses - தனிநிலை கடந்த காலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Ex: | I studied | - நான் படித்தேன். | You studied | - | நீ படித்தாய். |
| | He studied | - அவன் படித்தான். | We studied | - | நாங்கள் படித்தோம். |
| | You studied | - நீங்கள் படித்தீர்கள். | They studied | - | அவர்கள் படித்தார்கள். |

### The simple past is used - தனிநிலை கடந்த கால வினைவடிவம் வரும் இடங்கள்.

**1. To indicate an action completed in the past - கடந்தகாலத்தில் முடிவுற்ற செயலைக் குறிக்கும் பொழுது**

Ex: She left school last year. - அவள் படிப்பைச் சென்ற ஆண்டு நிறுத்திவிட்டாள்.

**2. To express past habits - கடந்த கால பழக்கங்களை குறிக்கும் பொழுது**

**செய்து பாருங்கள்**
Simple present tense, Simple past tense
என்பனவற்றை நன்றாகப் புரிந்து, மேலே தரப்பட்டது போன்ற உதாரணங்கள் எழுதிப் பேசிப் பழகவும்.



உலகில் செப்பு அதிகம் கிடைக்கும் இடம் – சிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர நிர்வாகமும் சுய முன்னேற்றமும் - (J.S ஏப்ரகாம்)

பாகம் -12



**எண்ணத்தை செயலாக்குங்கள்**

தகுந்த நேரத்தை உபயோகிக்க முன்பும், அதனை வீணடித்துவிட்ட பின்பும் அதற்கு மதிப்பில்லை. ஒரு நாளில் ஒரு மணி நேரம் செலவழியுங்கள் பட்டதாரியாகி விடுவீர்கள். உங்களிடம் நேரம் இருந்து விட்டால் போதும் செய்ய முடியாதது என்று எதுவுமே இல்லை.

நாளை, அடுத்த வாரம், அடுத்த மாதம் என்று நேரத்தின் வருகைக் காகக் காத்துக் கிடக்காதீர்கள். இன்று பெற முடியாத நேரத்தை இன்னும் எத்தனை ஆண்டுகளாயினும் நீங்கள் பெறப் போவதில்லை. நேரம் ஆற்றொழுக்கு போல் இடையறாது ஓடிக் கொண்டிருக்கும். அதனை நாம் தான் கையில் அள்ள வேண்டும். நேரத்தை மிஞ்சப்படுத்துவதற்கான வழிமுறைகள் சில:

- சில பழக்கத்துக்கு அடிமையான, தேவையற்ற செயல்களை விட்டொழியுங்கள்.
- கடின வழி வேண்டாம். எளிய வழிதான் சுலபமானதும், விரைவானதும் ஆகும்.
- ஒரே சமயத்தில் நாலு வேலை பார்க்க முடியாது. ஆனால் இரண்டு காரியங்களைச் செய்யப் பழகிக்கொள்ளலாம்.
- பகட்டுக்கும், ஊதாரித்தனத் துக்கும் அதிக நேரம் செல விடாதீர்கள். தேவையற்ற விடயங்களைக் கதைப்பதில் தான் நமது பெரும்பாலான நேரங்கள் வீணடிக்கப் பெறுகின்றன.

கார் டிரைவிங் கற்றுக்கொள்ள தியரி மட்டும் போதாது. அதனை ஓட்டிப் பழக வேண்டும். ரொம்பவும் சுலபமான வழியைக் கண்டறிவது சோம்பேறித்தனத்தை வளர்ப்பதாகாது. எதிலும் இருப்பதைவிட நல்ல வழியை நாம் கண்டறிய வேண்டும். எதைச் செய்தாலும் துரிதமாக, நல்ல விதமாக, சாமர்த்தியத்துடன் செய்து பழகுங்கள். வெற்றிகரமான மனிதர்கள் தங்கள் வேலையை முடித்துக் கொள்வர். திறமையற்றவர்களோ முடிவின்றி தங்கள் வேலையுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**நேரம் இல்லை என்பவர்களுக்கு ஒரு வார்த்தை**

நீங்கள் முக்கியமான காரியத்தைச் செய்வதற்கு மட்டும் எப்படியாவது நேரத்தைக் கண்டு பிடித்து விடுகின்றீர்கள். சற்று முக்கியத்துவம் குறைந்த காரியமென்றால் அதைக் கையில் எடுக்கத் தயங்குகின்றீர்கள். உண்மையிலே எல்லாவற்றுக்கும் நேரம் இருக்கின்றது. முயற்சி எடுப்பது நம் கையிலேதான் இருக்கின்றது.

**குறிக்கோள்**

நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் நேர நிர்வாகம் இருக்க வேண்டும். நேர நிர்வாகமின்றி நாம் செய்யும் காரியங்கள் முழுமையடையாது.

**ஒவ்வொரு நாளும்**

இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு மணித்தியாலத்தை உங்களுக்கென ஒதுக்குங்கள். இன்றைய பொழுது என்னென்ன செய்தோமென படுக்கைக்குப் போக முன் எழுதுங்கள். அவற்றில் எத்தனை விடயங்கள் தேவையானவை எனத் தீர்மானியுங்கள். அவற்றைக் கொண்டே வீணாக நேரம் செலவழிவதனைத் தடுத்துக் கொள்ளலாம்.

நாளை என்ன செய்ய வேண்டுமென சிந்தியுங்கள். இருக்கும் நிலையைவிட ஒரு படியேனும் முன்னேற வழி காணுங்கள். அடுத்தவர் குறுக்கீடின்றி சுய ஆராய்ச்சி நடத்துங்கள்.

**வார விடுமுறையில்**

வேலை காரணமாக உங்கள் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக நேரம் செலவிட முடியாமல் போகலாம். நீங்கள் கஷ்டப்பட்டு உழைப்பது யாருக்காக? உங்கள் குடும்பத்திற்காக. எனவே ஓய்வு நாட்களில் குடும்ப அங்கத்தவர்களோடு மகிழ்ச்சியாக நாளைச் செலவிடுங்கள். குடும்ப உறவுகளை மேம்படுத்திக் கொள்ளாதவர்களின் வாழ்க்கை சீர்குலைந்து போகும்.

**வயது தடையல்ல**

வாய்ப்புக்கள் எப்போதுமே உண்டு, ஆனால் நாம் அதைக் கண்டுகொள்ளத்தான் நாளாகின்றது. சாதிக்க வேண்டும் என்ற உத்வேகம் இருந்தால் எந்த வயதிலும் சாதிக்க முடியும். எழுத்தாளர் நெப்போலியன் ஹில் தனது நாற்பத்தி ஐந்து வயதுக்குப் பிறகும், சிற்பி மைக்கேல் ஆஞ்சலோ எழுபது வயதுக்குப் பிறகும் சாதனை புரிந்தார்கள். எனவே நாம் சாதனை செய்ய வயது தடையல்ல. நேரத்தின் அருமை அறிந்தவர்கள் நிச்சயம் முன்னேறலாம்.

எனவே இழந்த நேரத்தைத் திரும்பப் பெற முடியாது. இனிவரும் பொன்னான நேரங்களையாவது முறையாகத் திட்டமிட்டு பயனுள்ள காரியங்களை செய்ய வேண்டும். உரிய நேரத்தில் உரிய வேலைகளைச் செய்தால் வாழ்வில் வெற்றி நிச்சயம்.


முற்றும்.



மனிதனின் பார்வையைவிட கழுகின் பார்வை எத்தனை மடங்கு கூர்மையானது – 8 மடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளையாட்டு - 1




**தேவையான பொருட்கள் :** கண்ணாடி டம்ளர்
தண்ணீர்
மெல்லிய அட்டை

**செய்முறை:** டம்ளரில் விளிம்பு வரை தண்ணீர் நிரப்புக. டம்ளரில் அட்டையை வைக்கவும். உள்ளே காற்றுக்குமிழ்கள் இருக்கக் கூடாது. இருந்தால் தண்ணீரைக் கொட்டிவிட்டு மீண்டும் நிரப்ப வேண்டும். அட்டை மீது ஒரு கையை வைத்து அழுத்திக் கொண்டு டம்ளரைத் தலை கீழாகக் கவிழ்க்கவும். மெதுவாக அட்டையைத் தாங்கிக் கொண்டு இருக்கும் கையை எடுக்கவும். தண்ணீர் கொட்டாமல் அப்படியே இருக்கும்.

**காரணம் :** டம்ளரின் விளிம்பும் அட்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்கின்றன. காற்றழுத்தம் அட்டையை மேல் நோக்கித் தாங்கி விழாமல் தடுக்கின்றது. உள்ளேயிருக்கும் நீரில் ஈர்ப்பு விசை அட்டையைத் தள்ளக் கூடிய அளவுக்கு இல்லாததால் நீர் கொட்டாமல் இருக்கின்றது.

# அறிவியல் விடயங்கள்

**அணு என்றால் என்ன?**
பொருளை ஆக்கும் அடிப்படையான துகள் அணு எனப்படும். அணுக்களில் எலெக்ட்ரான், புரோட்டன், நியூட்ரான் ஆகிய மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன.

**மின்னல், இடியோசை என்பன தோன்றுவதற்கான காரணங்கள் எவை?**
மழை காலத்தில் மேகங்களில் மின்சக்தி நிறைந்திருக்கும். இரண்டு மேகங்கள் ஒன்றோடொன்று மோதும் போது மின் சக்தி பாய்கின்றது. அதன் போது கண்ணைப் பறிக்கக் கூடிய ஒளி உண்டாகின்றது. இதுவே மின்னல் ஆகும். மின்னலால் அதிக வெப்பம் உண்டாகின்றது. அதனால் காற்று திடீரென சூடாகி விரிந்து, பின் திடீரென குளிர்ந்து சுருங்குகின்றது. அதனால் ஏற்படும் ஒலிதான் இடியோசையாகும்.

**மற்ற நேரங்களை விட நண்பகலில் வெயில் கூடுதலாக இருக்கக் காரணம் என்ன?**
காலையிலும் மாலையிலும் சூரியக் கதிர்கள் சாய்வாக நிலத்தில் விழுகின்றன. தூரம் அதிகம் அதனால் வெயில் குறைவு. நண்பகலில் சூரியக் கதிர்கள் குத்தாக நிலத்தில் விழுகின்றன. தூரம் குறைவாகையால் வெயில் அதிகம்.

**புவிக்குப் புவியீர்ப்பு சக்தி இல்லாமல் போனால் என்ன நிகழும்?**
மனிதன் காலையும் மாலையும் புவி மீது நிற்பதற்குப் பிரதான காரணம் புவியீர்ப்பு சக்தியாகும். புவியீர்ப்பு இல்லாது போனால் புவிச் சுழற்சியால் ஏற்படும் மைய நீக்க விசையால், எல்லாப் பொருட்களும் வானத்தில் வீசப்படும். உயிரினங்கள் அனைத்தும் வானின் அந்தரங்கத்தில் மிதக்கும்.

**ஓசோன் படை என்றால் என்ன?**
நமது பூமியின் மேல் வளி மண்டலம் கவிழ்ந்துள்ளது. வளி மண்டலத்தின் அதி கீழ்ப் படையை மாறன் மண்டலம் என்பர். மாறன் மண்டலத்தின் மேல் இருப்பது படை மண்டலம். இவை இரண்டுக்குமிடையில் மெல்லிய சவ்வு போன்று ஒரு படையுள்ளது. அது ஓசோன் ($O3$) வாயுவால் ஆகியுள்ளது. இந்த ஓசோன் படை சூரியனிலிருந்து வருகின்ற அல்ரா வயலெற்றை தடுத்து வானவெளிக்குத் திருப்பி அனுப்பி வைக்கின்றது. அதன் மூலம் புவியின் பச்சை வீட்டு விளைவைப் பேணுகின்றது.

**ஒரு மனிதனின் உடலிலுள்ள இரத்தம் எவ்வளவு?**
வளர்ந்த மனிதனின் உடலில் 4 தொடக்கம் 5 லீற்றர் இரத்தம், இரத்தக் குழாய்களுடாக ஓயாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றது.

**நாம் உண்ணும் உணவில் கல்சியம் ஏன் ஓரளவு இருக்க வேண்டும்?**
உடல் எலும்புகள், பற்கள் வளர்வதற்குக் கல்சியம் தேவை. பால், பாற் பொருட்கள், பச்சைக் காய்கறிகள், தினை வகைகள் என்பனவற்றில் கல்சியம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணல் அருப்பே

**Fr. ஜெரி**

1943 ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 2ஆம் நாள் இயேசு சபையில் இறுதி வார்த்தைப்பாடு எடுத்து, அந்த இயக்கத்தின் முழு உறுப்பினராக பொறுப்பு எடுத்தார். இதன் மூலம் அவரது கடமை உணர்வு மேலும் முடுக்கி விடப்பட்டு, ஒளிவிடும் என்பதில் ஐயமில்லை. அத்தகை யதொரு கட்டத்தை ஏற்படுத்திய அந்த அபாயமான தினம்தான் 1945 ஆவணி 6ம் திகதி. அன்றைய தினம் ஹிரோசிமா நகரில் அணுகுண்டு வெடித்ததில் 80,000 மக்கள் கொல்லப்பட்டார்கள். அபாயம் ஏற்பட்ட ஒரு சில மணித்துளிகளிலேயே வீரமாக, வேகமாக மக்களுக்குத் தேவையான முதலுதவியை பேதுரு அருப்பே செய்தார். 20 ஆண்டுகளுக்கு முன்பு தாம் கற்று அறிந்திருந்த மருத்துவ ஞானத்தைப் பயன்படுத்தி 200 மக்களை அன்றைய தினம் குணமாக்கினார்.

தமது இல்லத்தையே ஓர் அவசர மருத்துவமனை யாக்கினார். இறைபணி என்ற முறையில் குருவான வராகவும், சமூகப்பணி என்ற முறையில் மருத்துவராகவும் தாம் அச் சமயத்தில் பணியாற்றிய போது தமக்கு ஒரு புதுவித தாக்கத்தை ஏற்படுத்தியதாக பின்வருமாறு அந்நிகழ்ச்சியை அவர் நினைவு கூறுகின்றார்.

எரிபுண்களாக நொந்து கிடந்தவர்களுக்கு மருந்து கட்டிய போதும், இறந்து போனவர்களை நல்லடக்கம் செய்யும் பணியைச் செய்யும் முன்பும், அதிகாலை 5 மணிக்குக் கல்வாரியாகவே மாறி விட்ட ஹிரோசிமாவில், இயேசுவின் முன்னைய கல்வாரித் தியாகப் பலியை நினைவு கூர்ந்து திருப் பலியை ஆரம்பித்தேன்.

இதயத்தை இறைவன்பால் ஈர்த்துப் பக்தி நிலைப் படுத்தி நிறைவேற்ற அப்போது அச்சூழ்நிலை இடமளிக்க வில்லை. அவர்களது இல்லத்து அறைக் கோவில் பாதி இடிந்து போன நிலையிலும் காயம்பட்டவர்களால் முற்றிலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

தழற்புண்ணால் வெந்துயர்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த உடல்கள் அந்த அறையின் தரையில் அடுத்தடுத்து வரிசையாக கிடத்தப்பட்டிருந்தன.

அவர்களில் எவரும் கிறிஸ்தவரல்லர். ஆகவே தங்க ளுக்கு முன்பிருந்த பீடத்தில் நடந்து கொண்டிருந்த திருப் பலி என்னும் நிகழ்ச்சியின் தன்மையோ, அர்த்தமோ ஒன்றுமே புரியாத நிலையில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அக்கால முறைப்படி, ஆலயத்தில் இருக்கும் மக்களுக்கு முதுகுப் புறங்காட்டி, பீடத்தின் முன் இலத்தீன் மொழியில் திருப்பலி செய்து கொண்டிருந்த நான் இடையில் "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று கூறுவதற்காக மக்கள் பக்கம் திரும்பினேன்.

அந்தோ! என் கண்களைக் கரைத்த காட்சி! மக்களைப் பார்த்து என் கைகள் நீண்டு விரிந்தன. ஆனால் ஆண்டவர் உங்களோடு இருப்பாராக என்ற சொல் தொண்டைக் குள்ளேயே நின்றுவிட்டன. இவர்களைப் பார்த்து எப்படி ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்ற சொற்கள் தொண்டைக்குள்ளேயே நின்று விட்டன. இவர்களைப் பார்த்து என்னால் எப்படி ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று கூறமுடியும். மரண வேதனையில் துடித்துக் கொண்டிருந்த மனித குலத்தின் சோகத்தைக் கண்ணுற்ற போது, திரும்ப முடியாமல் அப்படியே அசைவற்று மருட்சி யுற்று, கைகளை நீட்டிய நிலையிலேயே நின்றேன்.

எனக்கு முன் கீழே கிடந்த அத்தனை ஜோடிக் கண்களும் என்னைப் பார்த்தன. உடல் நலமளிக்கும் ஓர் ஆற்றலையோ, அல்லது ஏதோவோர் ஆறுதலையோ எதிர் பார்த்து அவைகள் பீடத்தை ஆவலோடும், ஏக்கத்தோடும் ஏறிட்டுப் பார்த்தன.

உணர்வு மீளப்பெற்ற நான் பீடத்தின் பக்கம் திரும்பி, செபங்களைத் தொடர்ந்தேன். உண்மையிலே அந்தப் பீடத்திலிருந்து அருளும் இரக்கமும் அபரிமிதமாகப் பொழிந்தன. 2 பேர்களைத் தவிர மற்ற 200 பேர்களும் முற்றிலும் குணமடைந்து சென்றனர். அதுமட்டுமல்ல, வேதனைகளின் மத்தியிலும் முகம் மலர்ந்து புன்னகை காட்டும் அளவுக்குப் பக்குவம் பெற்றுச் சென்றனர்.

அந்நாளும் அந்நிகழ்ச்சியும் பேதுரு அருப்பேவுக்கு மேலும் ஒரு புதிய பரிணாமத்தை அளித்தது. அணுக் கதிர்களால் அழிந்த உடம்புகள், எட்டிய தூரம் வரை பசுமை அழிந்த நிலை, தாயை இழந்து துயருடன் கதறும் பச்சிளம் பாலகர்கள், அங்கங்களை இழந்து அவதியுறும் மக்கள் போன்றவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பேதுரு அருப்பே உணர்ந்து கொண்டார்.


அணுகுண்டு போன்ற அழிவுச் சக்திகளின் கொடுமைகளைப் பற்றி அனுபவங்கள் அடிப்படையில், உலக மக்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்ல பயணங்களை மேற் கொண்டார். மீண்டும் ஓர் அணுகுண்டு வெடிக்காமல் இருக்க மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அணுதாக்கத்தின் விளைவுகளை விளக்கிக் கூறினார்.

தொடரும்...



பிறந்த குழந்தையின் கண்களுக்குத் தெரியும் நிறங்கள் – **கறுப்பு, வெள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்


ரசிகர் : நேற்று நடந்த ஓவியக் கண்காட்சியில் உங்க ஓவியம் மட்டும்தான் பார்க்கக் கூடியதாக இருந்தது.

ஓவியர் : உங்கட உயர்ந்த ரசிப்புத் தன்மையைப் பாராட்டுகின்றேன்.

ரசிகர் : அட நீங்க வேற. நான் என்ன சொல்றேன்னா மற்றவர்களுடைய ஓவியங்களை யெல்லாம் சுத்தி ஒரே சனக்கூட்டம்.

**M. துஷாணி,** கந்தளாய்.





முதியவர் : என்ன தம்பி கத்தியா வாங் கிட்டுப் போறீங்கள்?

தம்பி : இல்லீங்க சிரிச்சிக்கிட்டு வாங் கிட்டுப் போறேன்.

**சி. சிறீவதனி,** முல்லைத்தீவு.



ஆசிரியர் : பக்டீரியா படம் வரையச் சொன் னேனே. ஒன்றுமே வரையாமல் வந்திருக்கிறாய்.

மாணவர் : பக்டீரியா கண்ணுக்குத் தெரியா துன்னு நீங்கள்தானே சொன்னீங்க.


**சி. கயூபன்,** இடைக்காடு.



ஒருவர் : ஏன் நம்ம தலைவரை அந்தக் கிழவி அடிக்கிறா?

மற்றவர் : பிரச்சாரத்துக்குப் போன இடத்தில் நான் உங்கள் வீட்டுப் பிள்ளை என்று சொல்லிட்டார். அதுதான் கிழவி தன் மகன் மீதுள்ள கோபத்தை நம்ம தலைவர் மீது காட்டுது.

**க. தனுஜன்,** தேவர்குளம்.



சிறுவன் : பாட்டி இன்றைக்கு நான் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ளப் போகின்றேன். என்னை ஆசிர்வாதம் பண்ணு.

பாட்டி : பார்த்து மெதுவாக ஓடப்பா வேகமாக ஓடி கை, கால முறிச்சிடாதே.

**N. ரேணுகா,** கந்தளாய்.

கணவர் : நான் நேற்றுக் கனவில் அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்தேன்.

மனைவி : எப்படி இருந்தது?

கணவன் : என்னடி இப்படிக் கேட்கின்றாய் நீயும் தானே வந்தாய்

**நி. தனோஜி,** ஊரியன்கட்டு.



ராஜன் : இன்றைக்கு இசைவிழாவைப் பிரபல தலைவலி மாத்திரை தயாரிக்கின்ற கம்பனிதான் ஸ்பொன்சர் பண்ணு தாமே?

கமலன் : அப்ப இன்றைக்கு நிகழ்ச்சியெல்லாம் ஒரே தலை வலியாக இருக்கப் போகுதுன்னு சொல்லுறியா?

**த. குமுதன்,** தேவர்குளம்.





ஒருவர் : இந்த பஸ் எதுவரைக்கும் போகும்?

மற்றவர் : டீசல் இருக்கிற வரைக்கும் போகும்.

**ச. லக்சினி,** இலகடிப்பிட்டி.



மகன் : ஏனம்மா பக்கத்து வீட்டில இருக்கிறவங்க ரொம்ப ஏழையாம்மா?

தாய் : இல்லடா கண்ணா. ஏன் அப்படிக் கேட்கின்றாய்?

மகன் : அவங்க வீட்டுக் குழந்தை 25 சத நாணயத்தை விழுங்கினதற்கு இப்படி ஆர்ப்பாட்டம் செய்யு றாங்களே!

**இ. சுகாசினி,** சிவந்தீவு.

தினேஸ் : என் நாய் காணாமல் போயிற்று

ராஜன் : ஏன் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்கலாமே

தினேஸ் : அதனால் என்ன பயன்? என் நாய்க்குத் தான் படிக்கத் தெரியாதே.

**இ. சுகிர்தா,** சிவன்தீவு.



கமல் : அண்ணே இந்த ஹோட்டலுக்குள் நான் போகலாமா?

கேசர் : வாகனங்களுக்கு மட்டும்தான் உள்ளே போக இயலாது. ஏன் கேட்கின்றீர்கள்?

கமல் : இல்ல, என்ர பெயர் மயில்வாகனம் அதுதான் கேட்டேன்.

**A. வினிடா,** இலகடிப்பிட்டி.





மகன் : அம்மா நான் உங்களுக்குச் செலவை குறைத்து விட்டேன்.

தாய் : எப்படி?

மகன் : நான் இந்த முறையும் அதே வகுப்புத் தான்.

**த. ரவிச்சந்திரன்,** மாளிகைப்பிட்டி.



தூங்காத உயிரினம் – **புழுக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி

ஈழமதை புதை குழியாக்கிவிட்டு
புன்னகை பூத்த அலைகளால்
சிரிக்கின்றாயே உன் கொடுமையில்
வீழ்ந்தவர்கள் இன்னும்
அழுதுகொண்டிருக்கின்றார்கள்.

ஆயிரம் பேருக்கு வைத்தாய் கொள்ளி
அதனால் அழுகின்றார்கள் இங்கு சொல்லி.

நீ வந்து இரண்டு ஆண்டுகள்
வந்துகொண்டிருக்கையிலே
எதனைச் சாதித்ததாக எண்ணி மகிழ்கின்றாய்?

இரண்டு ஆண்டுகள் நினைவிலும்
துள்ளிக் குதிக்கின்றாய்
அழுகின்ற உள்ளங்களை எப்படி
ஆறுதல்படுத்தப் போகின்றாய்?

நீ சாதித்த சாதனையென
அனைவருக்கும் வைத்தாய் சமாதி
அதனால் இங்கு இல்லை அமைதி

❖❖❖

## என் கனவு பலிக்குமா?

அன்பின் ஊற்றான அன்னையும்.
அறிவின் ஊற்றான தந்தையும்.
பாசத்தால் பிணைந்தேன் - பெற்றோருடன்
படித்தேன் பதவியை எதிர்பார்த்து

ஏக்கமும். துக்கமும் என் வயதில்
வழி பார்த்தேன் தந்தை வருவாரென
விழிநீர் பாதையை மூடிவிட்டது.
ஆறுதலும் அன்பும் தாயிடம்.
ஆறாத என் கண்ணில் நீரூற்று...

தந்தையில்லாப் பிள்ளையென என்னையும்
தரணியில் சொல்லிடுவர் மானிடர்
இறைவா! உன்னிடம் கையேந்துகின்றேன்.
இறந்த என் தந்தையை மீட்டுத்
தந்திடுவாயென தினம் கனாக் காண்கின்றேன்

M. சுஜிகலா, கந்தளாய்.

❖❖❖

## இலட்சியக் கனவு

எனது பாலர் பருவமிருந்து,
எனது பள்ளிப் பருவம் வரை
நினைவலைகளாய் தொடர்ந்தது.
என் கனவு எண்ணங்கள்
முழுவதும் எதிர்காலத்தை
நோக்கி - இரு கண்ணிலும்
ஏக்கப் பார்வைகள் - அற்புதமான
நண்பர்கள் எனக்காக எதுவும் செய்வார்கள்.
பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பு
படிக்க வேண்டும் - என்றென்றும்
எந்நேரமும் பொன்னான இந்நாதமே
இதுவே என் கனவு!



சே. சுகன்யா, கீளியன்குடியிருப்பு.

## சில நொடி சிந்திப்போம்

- காலங்கள் கடவுள் பாடும் இராகங்கள். அவை வீணடிக்கப்பட்டால் மீண்டும் கிடைப்பதில்லை.
- வாழ்க்கைப் படிகளில் மேலே ஏறும் போது வழியில் சந்திப்பவர்களுடன் அன்பாகப் இருக்க வேண்டும். ஏனென்றால் இறங்கிவரும் போது அவர்களைச் சந்திக்க நேரிடலாம்.

எஸ்.அலைக்சாண்டர், சாந்திபுரம்.

- அறிவு நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பட்ட வன்மையான சிறகு.
- நாம் எவ்வளவு நாள் வாழ்வோம் என்று நினைப்பதை விட எப்படி வாழ்வோம் என்பது முக்கியமானதாகும்.
- இலட்சியம் இல்லாத மனிதன் திசை கருவியற்ற கப்பலைப் போன்றவன்.
- நேற்று என்பது அனுபவம், இன்று என்பது நிகழ்வு, நாளை என்பது நம்பிக்கை.

கி. விதுஷாளினி, கொக்குபடையான்.

❖❖❖

## உன்னால் முடியுமானால்

- உன் சுற்றத்தார் நிதானம் தவறவிட்டு அப்பழியை உன் மீது சுமத்திட்ட போதிலும்உன்னால் நிலை குலையாது நிதானமாக நடந்திட முடியுமானால்...
- எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும் போது அவர்களது சந்தேகத்துக்கு இடமளித்துவிட்டு உன் மீது விசுவாசம் வைக்க முடியுமானால்...
- உன்னைப் பற்றிப் பொய்யுரைக்கும் போது நீ பொய்யுரைக்காதிருக்க உன்னால் முடியுமானால்...
- மற்றவர் உன்னை வெறுக்கும் போது உன் மனதில் வெறுப்புக்கு இடமளிக்காதிருக்க உன்னால் முடியுமானால்...
- அதிகம் நல்லவன் போல் காட்டிக்கொள்ளாமலும் பேரறிஞன் போல் பேசாமலும் இருக்க உன்னால் முடியுமானால்...
- பகைவர்களோ, பாசமிகு நண்பர்களோ உன்னை நோபிப்பதற்கு இடமளிக்காதிருக்க உன்னால் முடியுமானால்...
- பெறுமதிமிக்க ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்மிக்க அறுபது வினாடிகளால் நிரப்பிட உன்னால் முடியுமானால்...

இந்தப் பூமியும் அதிலுள்ள அத்தனையும் நிச்சயமாகஉனக்குரியவை தான். அன்றியும் நீ ஓர் உண்மை மனிதனாய்.

மு. தர்மிகா, சமயபுரம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் கடிதம்



மாணவர் விடியலே!

நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை. அதிலும் இங்கிலீஸ் ரொம்ப ஈஸி. ஆங்கிலம் கற்கவும் பேசவும் எளிய வழி போன்ற பல அம்சங்களைச் சுவைக்கின்றோம். நாங்களும் ஆக்கங்களை அனுப்ப பல முறை முயன்றாலும் இது நிறை வேறாமல் போய்விட்டது. காரணம் எமக்கு உரிய காலத்தில் மாணவர் விடியல் மலர் கிடைக்காமையாகும். மாணவர் விடியலே நாமும் உனக்கு ஆக்கங்களை அனுப்ப எமக்கு உரிய காலத்திற்கு முன் தலைப்பைத் தரவும். தை-மாசி 2007சூரிய மலர் ஆனி மாதம்தான் எமக்குக் கிடைத்தது. சில மாணவர் விடியல்கள் கிடைப்பதில்லை. ஆகவே மாணவர் விடியலே எமது குறைகளையும் கருத்தில் கொள்வாயாக.

**JRS மாலை நேர வகுப்பு மாணவர்கள்,** முல்லைத்தீவு.

***  ***  ***

என் மனதில் இடம் பிடித்த மாணவ விடியல் நீ! மாதம் ஒரு முறை எம் கையில் தவழ்பவன் நீ! என்னையே சிந்திக்க வைக்கும் ஆற்றல் கொண்டவன் நீ! நான் ஆங்கில கல்வி கற்க உதவி செய்வதோடு பல விடுகதைகள், கவிதைகள், பொது அறிவுகள், நற் சிந்தனைகள் போன்றனவற்றைச் சுமந்து வருகின்றாய். என் வாழ்வையே உயர்த்தும் திறமைமிக்கவனே யுத்தத்தால் எம் கையில் ஒரு சில மாதங்கள் தவழாவிட்டாலும் பின் சில மாதங்களில் ஒன்றாக என் கையில் ஓடிவந்தவன் நீ! உன் புகழ் உலகெங்கும் பரவிடவும், மாணவர் விடியலை வாசித்து மாணவர் விழித்தெழவும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யோ .றொசானி,** மண்டைதீவு.

***  ***  ***

என் நண்பன் மாணவர் விடியலே!

மாணவர்களின் திறமையைத் தாய் குழந்தையை சுமப்பது போல சுமந்து வருவதற்கு நன்றி. **வெள்ளி விழா** விடியலில் என் பெயரையும் மலர வைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

**S. லோகிதன்,** வாகரை.

***  ***  ***

மாணவர் மனதிலே மங்காத இடம் பெற்ற மாணவர் விடியலே!

நீ சுமந்து வரும் அத்தனை பக்கங்களும் அற்புதமான ஆக்கங்களைக் கொண்டுள்ளது. உனது சேவையை மென்மேலும் அதிகரிக்க வேண்டுமென உன் செல்வங்களாகிய நாம் வாழ்த்துக் கூறுகின்றோம். எங்கள் தாய் மண்ணுக்கு மன்னவன் நீ! எங்கள் கல்விக்கு புத்துயிர் ஊட்டும் உன்னை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம். மாணவர்களுக்கு மகத்தானவன் நீ! எங்களுக்கு மிகவும் விருப்பமானவன் நீ! உனது மலர இருக்கும் 'என் கனவு' என்ற விடியல் மலர்ந்து பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்.

**JRS மாலை நேர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள்,** சிவசக்திபுரம்.

***  ***  ***

அறிவிற்கு மருந்தாகி விழிகளுக்கு விருந்தாகிவிடியலைத் தரும் மாணவர் விடியலே! உனது ஆக்கங்கள் அனைத்துமே ஆனந்தம் தருகின்றது. நீ ஒவ்வொருமுறை வரும் போதும் உன் வரவுக்காக வழிமேல் விழி வைத்துப் பார்ப்பதில் நானும் உன் வாசகி. உனது பணி சிறக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள். வாழ்க, வளர்க.

**ந. லுகிதா,** சிவன்தீவு.

***  ***  ***

மாணவச் செல்வங்களின் கைவண்ணத்தைச் சுமந்துவரும் சுதந்திர விடியலே!

நீ தாங்கி வருகின்ற அறிவம்சங்கள் அனைத்தும் மாந்தரின் உள்ளத்தில் மகிழ்ச்சியூட்டுகின்றன. பட்டாம் பூச்சியாக சிறகடித்து விடியலை ஏற்கும் மாணவர்களின் மனங்களிலோ ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அனைவரையும் கவர்ந்திழுக்கும் அன்பு விடியலே! உன் சேவை குன்றின் மேல் தீபம் போல என்றும் மிளிர என் கோடான கோடி வாழ்த்துக்கள்.

**A. ப்ரியா,** வாகரை.

***  ***  ***

என் கனவின் கதாநாயகன் மாணவர் விடியலே!

நீ மாணவர்களுக்கு மட்டுமின்றி மானிடர் அனைவருக்கும் மகத்தானவன். என்றும் என் கனவில் இழையோடிப் போனவனே. நீ சுமந்து வரும் அத்தனை விடயங்களும் என் மனதைத் தொட்டுச் செல்கின்றன. உன் அடுத்த விடியலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உன் ரசிகை

**G. சர்மிளா,** அடம்பன்.

***  ***  ***

எம் இனிய விடியலே!

எமக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் அறியாமை எனும் அரக்கனை விரட்டியோடச் செய்த இயேசு சபை அகதிப் பணியின் புதிய வீரனாக உருவெடுத்து வந்து எமை அறிவாளியாக ஆக்கிக் கொண்டிருக்கும் மாணவர் விடியலே! உன் புதிய இதழான **"என் கனவு"** எனும் இதழுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம். உன் பணி தொடர என்றும் உனை வாழ்த்திக் கொண்டிருக்கும்

**JRS மாலை நேர வகுப்பு மாணவாகள், ஆசிரியர்கள்,** கந்தளாய்.

***  ***  ***

என் அன்பு விடியலே!

உன் வருகைக்காக காத்திருப்பேன். நீ சுமந்துவரும் அத்தனை ஆக்கங்களும் தேனினும் இனிமை. நீ சுமந்து வரும் பொது அறிவு, வினா விடை, கவிதைகள், சிந்தனைத் துளி அனைத்தையும் நான் விரும்பி வாசிப்பேன். என் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றாய். அடுத்து மலரும் **என் கனவு** இனிமையான ஆக்கங்களைக் கொண்டுவர வாழ்த்துகின்றேன்.

**ரா. சிவராஜா,** கீரியன்குடியிருப்பு.



பொதுவாக சூரிய கிரகணம் நிகழும் காலம் – **7 நிமிடம் 58 நொடிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுக்கள்

CONGRATULATIONS!

**(கவிதை, ஜோக்ஸ், கட்டுரை, கதை, விடுகதை, பொதுஅறிவு, கடிதம் எழுதியவர்கள்)**

**முல்லைத்தீவு :** சா. றெஜினா

**அச்சுவேலி :** க. மேரி நிஷாந்தினி, ந. தா்சா, லி. லின்ரா சாந்தினி, ந. நிசா, இ. சுவர்ணா, அ. டன்சன், த. பிரதீபன்

**மண்டைதீவு :** அ. துஷாந்தினி, அ. அனஸ்ரீனா, டே. அசெம்ரா

**கொக்குபடையான் :** வி. விதுஷன், யோ. டிலக்சனா, N. நளாயினி, ச.கிறிசாந்தினி, சி. அனுசியா, ஆ. டிசாளினி

**சிவசக்திபுரம் :** ப. ரிஷ்ஸ்வரன், ந. ராகினி, கி. துஸாந்தினி

**சமயபுரம் :** பா. ரேவதி

**வாரிக்குட்டியூர் :** ஜீ. சஜீந்தன், ஆ. தோரகா, க. சுஜிபன், வே. நிசாந்தன், அ. சயந்திகா, பா. பத்மநாதன், ச. சிவதா்சன்

**கணேசபுரம் :** ச. தமிழ்க்குமரன், கா. குமரேசு, மோ. சுஜீபன், ஜே. றெக்மன், மோ. சுபப்பிரியா, க. அஜந்தினி

**களிமோட்டை :** ர. டினோபி, செ. பிருந்தா, மு. வினித்தா, பெ. டிலக்சி,

**தோட்டவெளி :** நி. நிக்ரெலா, S. ஜெயபாலன், லோ. தனு

**பள்ளிமுனை :** இ. மேரிகெலன், எ. ஆன்சாமிலிறோச்

**கந்தளாய் :** யு. சங்கீதா, சுஜிவினி, சோ. விக்னேஸ்வரி, S. சிவரூபனா, S. வதனா

**சுண்டிக்குளி :** ச. எமில்ற்றன், யே. டியூட்சன், இ. கிருகாந்தன், ச. சாணுகா

**சாவற்கட்டு :** M. ஜேம்ஸ், J. மேரிஸ் ரெலா, T. கேதீஸ்வரன், செ. மேரிமிதுஸ்ரெலா

**தேவன்பிட்டி :** S. டலாஜினி

**பாரதிபுரம் :** ரெ. கேதீஸ்வரி, வி. டில்சா, க. ப்ரீத்திக்கா

**லிங்கபுரம் :** கா. ஜீவசரோஜினி, தி. தீபதா்சினி, ஜெ. துசாந்தினி

**அம்பலவன் பொக்கனை :** சு. சுதா்சன்

**சொறிக்கல்முனை :** எ. பிரதீஸ் ஜெகன், தே. றீசா டன்சி, அ. ஸ்ரெலாறாஜி, ஜெ. கிறிஸ்ரெலா

**சவுக்கடி :** சி. மரியாள், அ. குமரன்

**தம்பலகமம் :** ர. விதுா்சிகா, சு. கோபிகா

**பேராறு :** S. உசாந்தினி, S. நிதா்சன்

**மூதூர் :** வ. நிலுக்சிகா

**பேசாலை :** க. சோபிகா, ஆ. மேரி நன்சியா, க. கோமதி, சி. ஜென்சி, ந. நந்தகுமாா், அ. தா்மசுதன், வீ. ஆனந்தி, ட. பவிற்றா, இ. குமாரி, சூ. டிலைக்சன், அ. அனற் கிரிஜா

**ஆச்சிபுரம் :** சி. சிலோஜினி, ஜெனித்தா, சி. நிதா்சனா, சி. கிஷாந்தினி, ம. அனுஷா

**ஜீவநகர் :** ரா. சுபஸ்ரிக்கா, வெங்கட்

**ஆசிகுளம் :** கே. சசியந்தன், பு. டலஞ்சியா, க. லக்ஷிகா, தே. தனுசிகா, த. நிதா்சன், இ. தமிழ்செல்வி, இ. திலகரூபி

**முதலியார்குளம் :** மு. ற. றெஜீனா

**பொக்கனை :** பு. திவாகர், சூ. சோவிதன்

**வாகரை :** S. லோகிதன், வி. றிபேக்கா, நா. குஷாளினி, சி. விவேகானந்தன்

**பறங்கியமடு :** செ. சிவமலா், லோ. கேணகா

**இறால்குழி :** கு. வேணி

**பெரிய குஞ்சுக்குளம் :** வி. விஜயசீலி

**கன்னியா :** ஆ. சுபாசினிதேவி, செ. சிந்துஜா, லோ. பிரரூபினி, சி. சிவநந்தினி, ரா. கோமதராஜ், K. கல்யாணி

**வாழையூற்று :** V. விதுஷன்

**ஊரியன்கட்டு :** க. நாகேஸ்வரன், வி. முரளி

**ஆனந்தபுரம் :** யே. டனிஸ்

**பூம்புகார் :** ச. மகேஸ்வரன்

**கற்குளம் :** S. நிரோஜா, ந. டிலானி, ச. ரஜீமதி, ப. அனுஜா, சி. நதியரசி, கு. சயந்தினி

**இம்முறை ஆக்கங்களை எழுதி அனுப்பி வைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள். இம் முறை வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு.**

1ம் இடம் - **யுவான் நிரஞ்சலா,** இருதயபுரம்.

2ம் இடம் - **M. ஜெனி,** வவுனியா.

3ம் இடம் - **சி. விதுா்சனா,** பாரதிபுரம்.

உங்களுக்குரிய பரிசுகளை உங்கள் மாவட்டத்திலுள்ள **JRS** அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமும் கைப்பழக்கம்



இ. அன்புராஜ்
கதிரவெளி





ம. வதனி
அச்சுவேலி



T. சிவா
கதிரவெளி




S. ஷகிலாசன்
கதிரவெளி




N. நதுர்ஷிக்கா
கந்தளாய்



வி. செந்தூரன்



R. மேரிகெலன்பிகிறாடோ
மன்னார்



அ. சகாயநாதன்
மன்னார்



M. M. சப்ராஸ்



K. கனிஸ்மா
கந்தளாய்



அ. சுயாந்தினி
அச்சுவேலி



ப. கோமதி
வாகரை



S. ஷகிலாசன்
கதிரவெளி




க. சீலோஷனா
வாழைச்சேனை



ச. அன்ரனிற்றாறோச்
இறக்கக்கண்டி



T. திபாகர்




ம. தாவேந்திரராஜ்
வாகரை



I. தர்சினி
மன்னார்



S. செந்தூரா
கந்தளாய்



ம. சதுர்ஷிகா
இறக்கக்கண்டி



R. றஜீபா
அச்சுவேலி




ம. சந்தோஷ்
மன்னார்



J. ருக்ஷி
சமயபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



JRS ஆங்கிலக் கற்கை மையத்தினை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் திறந்து வைத்தல்.

அருப்பே குடியிருப்புத் திறப்பு விழா தலைமன்னார்.






முன்பள்ளி மாணவர்களுக்கான கண்காட்சி தம்பலகாமம், திருகோணமலை.

விவசாயிகளுக்கான விதை நெல் வழங்கல் வவுணதீவு, மட்டகளப்பு.





JRS பணியாளர்களின் குடும்பங்களது ஒன்றுகூடல் மட்டகளப்பு

JRS பணி தற்காலிக வீட்டுத்திட்டம் வாகரை.





JRS பணியாளர்களின் குடும்பங்களது ஒன்றுகூடல் திருகோணமலை.

தெற்காசிய இயக்குனரும் புதிதாக தேசிய இயக்குனராக பதவியேற்கவுள்ள Fr. கமல் வவுனியாப் பணியாளர்களுடன்.

From :
**Jesuit Refugee Service**
**31, Clifford Place, Colombo 04.**
**Tel: 011 - 2504384**

To :

Transcent Printers (Pvt) Ltd. T/F : +94 11 2331404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org